தொடக்கப்பள்ளி

(கையூட்டு ஒழிப்பு நாடகம்)



திரு. அடிகளாசிரியர்

உ

இறைவன் துணை

தொடக்கப்பள்ளி

(கையூட்டு ஒழிப்பு நாடகம்)

ஆக்கியோர்

தொல்காப்பியச் செம்மல்

திரு. **அடிகளாசிரியர்,**

ஒய்வுபெற்றதமிழ்ப்பேராசிரியர்,

சித்தநாதேச்சுராதீனம்,

குகையூர் - 606 306, கல்லக்குறிச்சி - வட்டம்

விழுப்புரம் மாவட்டம்.

நூல் குறிப்பு

நூல் பெயர் : **தொடக்கப்பள்ளி**
(கையூட்டு ஒழிப்பு நாடகம்)

ஆசிரியர் : திரு. அடிகளாசிரியர்

பதிப்பு : முதற்பதிப்பு - 1949
இரண்டாம் பதிப்பு ஜூலை. 2010

உரிமை : ஆசிரியருக்கே

அளவு : டெம்மி 1/8

பக்கங்கள் : 16 + 92 = 108

படிகள் : 500

விலை : உரூபாய். 50/-

வெளியீடு : **தமிழறிஞர் அடிகளாசிரியர் அறக்கட்டளை வெளியீடு**
திருவருள் நிலைய வெளியீட்டகம்
குகையூர் - அஞ்சல்,
விழுப்புரம் மாவட்டம்
606 306

அச்சகம் : தர்மு கணினி மையம்
சிதம்பரம்
தொலைபேசி : 04144 - 2522544

நாட்டு நலப்பணித் திட்ட வெளியீடு

தமிழறிஞர் அடிகளாசிரியர் அறக்கட்டளை வெளியீடு

அடியேனின் தொல்காப்பியப் பணியைப் பாராட்டிய செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் குடியரசுத் தலைவரின் விருதாகிய தொல்காப்பியர் விருதையும் உருபாய் ஐந்துஇலட்சம் பொற்கிழியையும் எனக்கு வழங்கிச் (28-3-2010) சிறப்பித்தது. செம்மொழி நிறுவனம் வழங்கிய அத்தொகையை அடியாக வைத்துக் கொண்டு தமிழறிஞர் அடிகளாசிரியர் அறக்கட்டளை என்னும் தொண்டு நிறுவனத்தைத் (6-7-2010) தொடங்கியுள்ளேன்.

தமிழிலக்கண இலக்கிய ஆய்வு, கல்விப்பணி, சமயப்பணி, அறிவியல், பிற சமூகப்பணி முதலானவற்றை மையமாகக் கொண்டு தொண்டு செய்யும் நோக்கில் இவ்வறக்கட்டளை இயங்கும். எனது புதல்வர்கள் அறக்கட்டளையின் காப்பாளர்களாக விளங்கி தொடர்ந்து தொண்டாற்றுவார்கள்.

மேற்குறித்த தமிழறிஞர் அடிகளாசிரியர் அறக்கட்டளை வழியாகத் தொடக்கப்பள்ளி என்னும் **கையூட்டு ஒழிப்பு** நாடகத்தை அச்சிட்டு வழங்கியுள்ளேன்.

இங்ஙன்
திரு. அடிகளாசிரியன்
நிறுவுநர்-தமிழறிஞர் அடிகளாசிரியர் அறக்கட்டளை
குகையூர் - அஞ்சல்
விழுப்புரம் மாவட்டம் - 606 306

இறைவன் துணை

முதற்பதிப்பின் முன்னுரை

நாமும் நம்முடைய குடும்பமும் நன்றாக வாழ வேண்டுமானால், பிறரும் பிறருடைய குடும்பமும் நன்றாக வாழவேண்டும். பிறரும் பிறருடைய குடும்பமும் நன்றாக வாழாத வரையில், நாமும் நம்முடைய குடும்பமும் நன்றாக வாழ முடியாது. இதைத்தான் நம் ஔவைப் பிராட்டி **'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை'** என்று கூறியுள்ளார்.

நாமும் பிறரும் நன்றாக வாழ்வதற்கு நமது நாட்டின் அரசியலும் ஒரு துணைக் காரணமாகும். ஒழுங்கும், ஆற்றலும், சுறுசுறுப்பும் வாய்ந்த ஒரு அரசியல் நம் நாட்டில் இருக்குமேயானால், அது நம்முடைய நல்வாழ்விற்குத் துணையாய் நின்று அளவற்ற நன்மையை நமக்கு உண்டாக்கிவிடும். ஆதலால், கல்வியறிவுடைய எல்லா மக்களும் நல்லவன் ஆண்டாலென்ன கெட்டவன் ஆண்டாலென்ன என்று அக்கரையின்றி இராமல் நம்முடைய அரசியல் நன்றாய் அமைவதற்கான முயற்சியை யெடுத்துக்கொள்ள வேண்டும். அதிலும், நமது நாட்டில் இப்பொழுது நடப்பது மக்களாட்சி அல்லவா? அதனால், நாட்டு மக்களாகிய நாம் அரசியல் நடப்பில் அக்கரை கொள்ள வேண்டுவது நியாயந்தானே!

சட்டம் வகுத்தல், நிர்வாகம் நடத்தல், நீதி வழங்குதல் என்று அரசியல் மூன்று பிரிவாயுள்ளது. இம்மூன்றிலும் நல்லவர்களே இடம் பெற வேண்டும். அங்ஙனம் இடம் பெற்றால்தான் நமக்கு நல்வாழ்வு கிட்டும். இல்லையேல் நரக வாழ்வுதான்.

மேற்கூறிய மூன்றிலும் நடுநாயகமாயுள்ளது நிர்வாகம் நடத்தலே. இந்நிர்வாக அதிகாரிகள் ஏனைய

இரண்டிலிருப்பவரைக் காட்டிலும் கட்டுப்பாடும், ஒழுக்கமும், பயிற்சியும், சுறுசுறுப்பும், ஆற்றலும் உடையவராய் விளங்க வேண்டும். அங்ஙனம் விளங்கினாற்றான் நிர்வாக இயந்திரம் நன்றாய் நடக்கும். அங்ஙனமின்றித் தீக்குணங்கள் பலவும் அவர்களிடத்தில் இடம் பெற்றால் நிர்வாக இயந்திரம் கெட்டொழியும்.

நிர்வாக அதிகாரிகளிடத்தில் காணப்படும் பல தீய குணங்களில் தலையானது கையூட்டு வாங்கும் வழக்கமாம். இக்காலத்தில் அரசியல் நிர்வாகிகளிடத்தில் கையூட்டுக் கொடுத்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளுதலென்பது பலருடைய பழக்கமாயும் இருந்து வருகிறது. கையூட்டு கொடுப்போர் இருவகையர். ஒருவர், கொலை முதலான தீய காரியங்களில் ஈடுபட்டுத் தம்மேல் வழக்கு தொடராமலிப்பதற்காகக் கையூட்டு கொடுப்பார். மற்றொருவர், அரசியலாரிடத்தில் பெறவேண்டிய ஏதாவதொரு பயனை விரைந்து பெறவேண்டி அதற்காகக் கையூட்டு கொடுப்பார். இவற்றில் முதல் இலஞ்சமானது நாட்டில் ஒழுங்கீனத்தை வளர்த்துவிடும். இரண்டாவது கையூட்டோ,

பணங் கண்டால் தேவடியாள் படுக்கைக்கே
விரைந்தழைப்பாள் பணமின் றாயின்
குணங்கொண்ட மன்மதனே வந்தா லும்
குருடனெனக் கூறிப் போவாள்

என்றபடி, கையூட்டு கொடுத்தாற்றான் எந்தக் காரியமும் செய்ய முடியும், இல்லாவிட்டால் எத்தகைய காரியத்தையும் செய்ய முடியாது என்கின்ற எண்ணத்தை அதிகாரிகளுக்கு உண்டாக்கி விடுகின்றது.

அத்தகைய எண்ணம் அதிகாரிகளுக்கு உண்டாகிவிடின், ஒவ்வொரு காரியத்திலும் கையூட்டை

எதிர்பார்த்து எதிர்பார்த்து அரசியல் காரியங்களையே அவர்கள் மந்தப்படுத்திவிடுவார்கள். எனவே, இரண்டு விதமான கையூட்டுகளாலும் ஒழுங்கீனமும், அரசியல் மந்தமும் ஒரு நாட்டில் ஏற்படின், அந்நாட்டிலுள்ள பொதுமக்கள் அரசியல் நன்மை ஏதும் பெறாமல் அல்லற்பட வேண்டியிருக்கும். ஆதலால், இவற்றிற்கெல்லாம் முதற்காரணமான கையூட்டுகொடுக்கும் பழக்கத்தைப் பொதுமக்கள் அறவே நிறுத்திவிட வேண்டும். அப்பொழுதுதான் அரசியல் நிர்வாக இயந்திரம் நன்றாய் நடக்கும்.

ஏறக்குறைய பத்துயாண்டுகட்கு முன்பு, பலவிடங்களில் பல காலங்களில் நடந்தனவாய் அறிந்த கையூட்டு வரலாறுகளை **ஆரம்பாசிரியன்** என்னும் நாடகமாக எழுதினேன். அது, இந்தியவாலிபன், தியாகி என்ற பத்திரிகையில் வெளிவந்தது. அதையே பல மாற்றங்களுடன் **தொடக்கப்பள்ளி** என்னும் பெயரால் அச்சிட்டுத் தமிழுலகத்திற்குத் தருகின்றேன். இதிற் காணுங் குற்றங் குறைகளை எனக்குத் தெரிவிப்பின், அடுத்த பதிப்பை நன்கு பதிப்பிக்க, நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளுகின்றேன்.

சீமத்
சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க்கல்லூரி,
மயிலம்,
5.3.1949

இங்ஙனம்,
திரு. **அடிகளாசிரியன்,**
உதவித் தலைவன்.

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

(திரு. அடிகளாசிரியர்)

அறுபதாண்டுகளுக்கு முன்பு தொடக்கக்கல்வி நிர்வாகத்தில் நடந்துவந்த கையூட்டை ஒழிப்பதற்காகத் **தொடக்கப்பள்ளி** என்னும் நாடகத்தை எழுதி வெளியிட்டேன். அப்போது விதையாக இருந்த கையூட்டு தற்போது விருட்சமாக வளர்ந்து நாட்டைச் சீரழித்துக் கொண்டுள்ளது. இத்தகு சூழலில் கையூட்டிற்கு எதிராக உரத்த குரல் எழுப்பாவிட்டால் சனநாயகம் பறிபோய் பணநாயகம் ஆட்சி செய்ய நேரிடும். அவ்வாட்சி நல்லதன்று; ஆதலால் இவ்வெளியீட்டை வெளியிட்டேன்.

உச்சநீதிமன்றநீதிபதியர், கையூட்டைக் கட்டுப்படுத்த நமது நாட்டில் எந்தவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்பது மிகுந்த வேதனையை அளிப்பதாகக் கூறியுள்ளனர். அவர்கள் கூறிய அக்கருத்து எனக்கும் மிகுந்த மனவேதனையைத் தருகின்றது. அஃதோடு, கையூட்டு மலிந்த நாடுகளின் பட்டியலில் (179) இந்தியா 84-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்ற செய்தியும் கவலையளிக்கின்றது. இருப்பினும் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் நல்லவர் வாழ்கின்றனர் என்பதற்குச் சான்றாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

சென்னையில் மத்திய அரசு அதிகாரிகளும் ஊழியர்களும் **கையூட்டு ஒழிப்பு வாரவிழாவை** நடத்தி இதன் மூலமாகக் கையூட்டு வாங்க மாட்டோம் என்ற உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்களாம். இவ்வுறுதி மொழியை மக்களும், அரசியல்வாதிகளும் எடுத்துக் கொண்டால் நம்நாடு புனிதமடையும்.

வளர்ந்து வரும் வல்லரசு நாடுகளில் இந்தியாவின்பங்கு உயர்வாகவே உள்ளது. இந்தியாவின் வளர்ச்சியைப் பார்த்து அமெரிக்கா போன்ற அயல்நாடுகளெல்லாம் அச்சம் கொள்கின்றன. அத்தகு சூழலில் கையூட்டு என்னும் முள்செடியை முளையிலே கிள்ளி எறிய வேண்டும். இல்லையெனில் கையூட்டு என்னும் விதை மரமாக வளர்ந்து சமூகத்தையே நஞ்சாக மாற்றிவிடும். ஆதலால் நாமெல்லாம் ஒன்றுகூடி கையூட்டை ஒழிப்போம்; உயர்வோம்.

தொடக்கப்பள்ளி என்னும் இந்நாடக நூலிற்கு அணிந்துரை எழுதியுள்ள பெரும்புலவர் நல்லாசிரியர். பூவை. **சு. செயராமன்** அவர்கள் நேர்மையானவர்; ஒழுக்கமானவர்; கனவில் கூட கையூட்டைக் கருதாதவர். ஆதலால்தான் அவரால் அணிந்துரையும் கையூட்டை ஒழிக்கும் வெண்பாவும் வழங்க முடிந்தது. அவர் என்னுடைய நூறாம் அகவைப் பிறந்தநாள் விழாவிற்கு **அருட்காப்பு மாலையும், இயன்மொழிவாழ்த்தும்** பாடிய திறத்தவராவர். அத்தகைய அவர் வாழ்க! அவரின் தமிழ்த்தொண்டும் வளர்க எனக்கூறி வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

தொடக்கப்பள்ளி என்னும் இந்நாடக நூலை அச்சிட்டு வெளிப்படுத்திய அனைவரையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

இங்ஙன்,

குகையூர் திரு. அடிகளாசிரியன்.

15.12.2010

இறைவன் துணை.

நல்லாசிரியர், ஐம்பதிற்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களைப் படைத்த சிற்றிலக்கியவேந்தர், பேராசிரியர் **பூவை. சு. செயராமன்** அவர்கள் வழங்கிய

அணிந்துரை.

இயலிசை கூத்தாய் நிலைத்த
இயற்கையம் தமிழாம் ஆயை ;
கயற்புலி வில்லின் வேந்தர்
கவினுற வளர்த்த ஞாயை ;
மயலுறா உள்ளம் வைத்தே
மதியுற வணங்கும் தாயை;
அயலுறா வண்ணம் சேர்க்கும்
அடிகளின் திருத்தாள் காப்பே!

நன்னூற்றைக் கவினுறக் கடந்து, நற்றமிழுக்குத் திருத்தொண்டாற்றி, எண்ணரிய தொல்காப்பியம் தொடங்கி இலங்கு பல இலக்கணம் தேர்ந்து, தன்னரிய புகழ்மை மிக்க தகையாளர் திருஅடிகளாசிரியச் சால்பினாரின் தனிப்பெரும் படைப்பே இந்த மன்னு புகழ் நாடகம் எனில் இஃது மிகையுரையாகா.

நாடக நடுக்கரு:

இலக்கண உரை, இலக்கியவுரை, இலக்கியப் படைப்பு முதலானவற்றில் தலைசிறந்து விளங்கிய திரு.அடிகளாசிரியச் சான்றோரின் அரிய படைப்பே **தொடக்கப்பள்ளி** என்னும் இவ்வரிய நாடகம்.

கையூட்டை அன்பளிப்பாய் எண்ணி மயக்குறும் மாந்தரிடையே, கையூட்டின் வலிய வளர்ச்சியைக் கல்வித் துறை வழியும், அது கொண்டிருக்கும் கொடுமைகளின் வழியும் எடுத்துக்காட்ட ஆசிரியர் முனைந்துள்ளார்.

ஆசு இரியும் ஆசிரியத் தொழிலுள்ளும் கையூட்டு தலைவிரித்தாடிய பேயாட்டத்தை மெய்ப்பட விளக்கியுள்ளார். **ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோவில் ஆண்டி; அவனுக்கும் இளைச்சவன் பள்ளிக்கூடத்து ஆசிரியன்** என்ற பழங்காலப் பழமொழியைப் படம்பிடித்து, நல்லாசிரியர் பலர் மேலாளரால் அடைந்த துயரை அடிகள் விளக்கிக் காட்டியுள்ளார்.

இன்று **கையூட்டு கொடுப்பதும், வாங்குவதும் குற்றம்** என்று எழுதப்படும் விளம்பரங்கள், அது **(கையூட்டு)** பெறப்படும் என்பதற்காக வைக்கப்பட்ட விளம்பரமாக மாறியுள்ளதை ஒவ்வொருவரும் துறைதோறும் பட்டுத் தெரிந்துகொள்ளும் பட்டறிவாகும்.

மகப்பேறு தொடங்கி இடு(சுடு)காடு முடிய கையூட்டில்லாச் செயலில்லை எனலாம். வாய்மை காத்த தமிழரும் இதற்கு விதி விலக்கர் அல்லர்.

அன்னியர் ஆண்டோட, தன்னியர் ஆளும் காலத்தும் கண்மூடித்தனமாக வளர்ந்துவிட்ட கையூட்டைப் பற்றி, பள்ளிக்கூட நிகழ்வுகளைக் களமாகக் கொண்டு தமது நாடகக்கருவை அடிகள் அமைத்து விரித்துள்ளார்.

காட்சி அமைப்பு

இந்நாடகம் பத்தும் ஒன்றுமாகப் பதினொன்று காட்சிகளைக் கொண்டு விளங்குகின்றது. காட்சிகள் உறுப்புகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. இடம், காலம், உரியவர் என்ற முற்குறிப்புகளுடன் காட்சிகள் விளக்கம் பெற்றுள்ளன.

இந்நாடகம் கொசுப்பட்டியில் தொடங்கி, சோழபுரம், மாவட்டத் தலைநகர், ஆய்வாளர் வீடு, மருத்துவர் வீடு எனத் தொடர்ந்து தன்மையர் முன்னிலையர் இடம் நிறைவாய்ப் பல்லிடங்களைக் கதைநிகழ்விடங்களாகக் கொண்டு திகழ்கின்றது.

காட்சிகள் நாடகத் தோற்றம், வளர்ச்சி, தீர்வு என்னும் நாடக உத்தியைச் செம்மையாகப் பெற்றுள்ளன.

ஊரும் பேரும்:

கதை நிகழ்விடங்களாக ஐயன்அடிகள் தெரிந்த ஊர்களின் பெயர்கள் விந்தையும், நகையும் தோற்றுவிக்கின்றன.

அவர் குறிப்பிட்ட ஊர்களில் ஒன்று கொசுப்பட்டி, இங்குதான் நல்லசாமி என்னும் ஆசிரியர் பொல்லாச்சாமியாக வாழ்கின்றார். மாணவர் நிலையும், நெறியும், மொழியும் கொசுப்பட்டிக்கு உரியனவாகவே திகழ்கின்றன.

நல்லூராக ஐயன் காட்டுவது **சோழபுரம்** ஆகும். மனுநீதி கண்டவர் சோழர் அல்லரோ? நல்ல கல்வி, நல்ல **நாட்டாண்மை, சேனாவரையர்** முதலான நல்ல ஆசிரியர், **ஞானசம்பந்தன்** முதலான நல்ல மாணவர் கொண்ட ஊராகச் சோழபுரம் அடிகளால் அமைவுறக் காட்டப்பட்டுள்ளது.

'**ஊரைத் தேர்ந்து வாழு, அதன் பேரைக் கண்டு தெளிக**' என்பது இவற்றால் தாமோ?

நாடக மாந்தர்:

ஐயன்அடிகள் இவ்வினிய நாடகத்தில் மிகப்பல நாடக மாந்தரைக் கதையோட்டத்திற்கு ஏற்ப அமைத்துள்ளார்.

அல்லாப் பண்புடைய ஆசிரியர்க்கு நல்லசாமி என்ற பெயரைச் சூட்டியுள்ளார். உள் நஞ்சும், புறம் அழகும் கொண்டு திகழும் நாகத்தின் பெயரும் நல்லதுதானே!

புறம்வெளுத்து, அகம் சிறுத்து, கையூட்டிற் காரியம் சாதிக்கும் வழி தெரிந்த முரண்மாந்தர்க்கு இப்பெயர் பொருத்தமே.

கொசுப்பட்டி மாணவராக இராமன், சுப்பன், சஞ்சீவி, கூழையன், கோவிந்தன், வையாபுரி முதலானோர் படைக்கப்பட்டுள்ளனர்.

சோழபுரத்தின் நல்லாசிரியராகச் **சோமசுந்தரம், சேனாவரையர், பரிமேலழகர்** படைக்கப்பட்டுள்ளனர். நல்லறிவு மாணவராக **இராமநாதனும், ஞானசம்பந்தனும்**

விளக்கப்பட்டுள்ளனர். சோழபுர **நாட்டாண்மை** உற்றுழி உதவும் நல்ல அன்பராக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்.

விதியிது! வெந்ததைத் தின்று விதி வந்தால் போவோம்! என்ன செய்வது? என கையூட்டை எதிர்க்க முடியாத பல ஆசிரியரையும், எதிர்த்துப் போராடக் கூடிய சேனாவரையர், பாலு, வேலு போன்ற ஆசிரியரையும் இந்நாடகம் கொண்டு திகழ்கின்றது.

துணைக்கல்வி ஆய்வாளர் (டிப்டி இன்சுபெக்டர்), அவர் மனைவி கமலம், மகள் சந்திரா முதலான நாடக மாந்தர்வழி குடும்பமே கையூட்டுக் குடும்பம் என்று ஐயன் அடிகள் காட்டியுள்ளார்.

அக்கால அதிகார இனத்தார் கையூட்டுடன், பெண்பால் மெய்யூட்டும் வேண்டி பெண்டிர்க்குப் பெருந்துயரம் தந்துள்ளதை அறிய முடிகிறது. துணை ஆய்வாளர், மாவட்டத் தலைவர் (சில்லாப் பிரசிடெண்டு), தாமோதரன் வழி அடிகள் பெண்டிர் பட்ட பெரும் கொடுமைகளை விளக்கியுள்ளார்.

உடன்பட மறுத்தவர் பட்டப்பாடுகளை மருத்துவர், ஆசிரியை வழி வெளிப்படுத்தியுள்ளார்.

நாடகத்தீர்வுக்குத் தன்மையார், முன்னிலையாரைப் படைத்து அடிகள் தமது இலக்கணவுணர்வையும் விதைத்துள்ளார்.

நாடக நடை

இந்நாடகம் சமூகவியல் நடைமுறைக் கேட்டை உணர்த்தும் சமூக நாடகமாகும். இந்நாடகத்தின் நடை, நாடக மாந்தரின் பண்புநலனுக்கு ஏற்ற தனித்தனி நடையைப் பெற்றுள்ளது.

சேனாவரையர், பரிமேலழகர் முதலான நன்மாந்தர் நல்ல தமிழ்நடையைக் கொண்டுள்ளனர்.

தன்மையார், முன்னிலையாரின் உரையாடலும் நல்ல தமிழ்நடைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது.

இடையிடையே ஆசிரியர் கூறும் தற்கூற்றுகளில் - விளக்கங்களில் - நல்லதமிழ் நடை எடுத்தாளப்பட்டுள்ளது.

இடையிடையே விருத்தப்பாக்களும், சிந்துப்பாடல்களும் ஒளிர்ந்து ஆசிரியரின் புது உத்தியை நிலைநாட்டுகின்றன.

நாடகமாந்தரின் இச்சைமிகக் கொண்டு மொழியும் கொச்சை மொழிகளிலும் வெளிப்பட்டு மிகுவாய்க் காணப்படுகின்றன.

மெய்ப்பாட்டுச் சுவை:

நகைமுதலாக உவகையிறுவாய்க் கூறப்படும் எட்டும் நற்றமிழர் கண்ட மெய்ப்பாட்டுச் சுவையாம். இந்நாடகம் மெய்ப்பாட்டுச்சுவை பலவும் கொண்ட அரிய நாடகம்.

பிரசெண்டு, டெப்புட்டி இன்சுபெக்டர், எலிமெண்டரி, செக்கு எனும் சொற்களை நாடக மாந்தர் கையாளும் போது நகைச்சுவை (எள்ளற்சுவை) மிளர்கின்றன. வீழ்ந்து வணங்கிய ஆசிரியர் நல்லசாமியின் குடுமியைப் பிடித்து ஆய்வாளர் குழந்தை குதிரையேறி விளையாடிய நகைச்சுவையும் இந்நாடகத்தில் உண்டு.

கையூட்டால் ஆசிரியர் அடைந்த இன்னல்கள், அவலச்சுவையையும், இழிவரல் சுவையையும், அச்சச் சுவையையும் காட்டுகின்றன.

சேனாவரையர்த் தமிழ்ப்பற்று பெருமிதச் சுவையைத் தருகின்றது. அவரின் எழுச்சிமிகு பேச்சுவழி வெகுளிச்சுவை மிளிர்கின்றது.

'கையூட்டு வாங்காதவர் செருப்படியின் அடித்துகளுக்குக் கையூட்டு வாங்குவார் ஒப்பாகாக மாட்டார்' என்பதும்,

கையூட்டு வேண்டாமையே விழுச்செல்வம் என்பதும் பெருமிதச் சுவையை ஊட்டுகின்றன.

ஐயன்அடிகள்ஆசிரியர் பல்சுவையும் விளங்க இந்நாடகத்தையாத்துள்ளார்.

இடைப்பாட்டால் சாடும் உத்தி

ஐயன்**இளங்கோஅடிகள்** உரையிடையிட்ட செய்யுளைத் தந்து புகழுற்றார். நமது வாழும் **ஐயன் அடிகளாசிரியர்** பாட்டிடையிட்ட நாடக உரை தந்து புகழ்படைக்கின்றார். காட்சிகளுக்கு இடையிடையே தமது படைப்புகளான செய்யுட்களை விருத்தம், சிந்துகளாகத் தந்து சமுதாயக் கீழ்மைகளைச் சாடுகின்றார்.

கவர்மெண்டார்...(காட்சி - 4) எனத் தொடங்கும் எழுசீர் ஆசிரியக் கழிநெடில் விருத்தம்வழி கையூட்டு பெறுவாரைப் படைத்தபின் இண்டு, கோநாய், கள்வரையும் ஏன் படைத்தாய்? என்று இடைப்பாட்டால் சாடுகின்றார்.

காப்பி இட்டலி... (காட்சி - 7) என்ற சிந்துப்பாடல் வழி ஆசிரியர்படும் துன்பங்களைக் கூறிச் சாடுகின்றார்.

இச்சை வார்த்தை.....(காட்சி - 9) என்னும் அறுசீர் ஆசிரியக் கழிநெடில் விருத்தம் வழி நச்சுவாய்ப் பாம்பான பிச்சையரைப் பிரசிடெண்டு என்று சாடுகின்றார்.

அடகெடுவாய்....... (காட்சி - 10) என்ற எண்சீர் ஆசிரியக் கழிநெடில் விருத்தம் வழி வாணிகராய், மொத்த வணிகராய், நடனம் கற்ற கன்னிப் பெண்ணாய், சட்ட மன்ற உறுப்பினராய் ஆகாமல் ஆகூழில்லா (அதிட்டமில்லா) ஆசிரியராக ஆனதெண்ணி வருந்துவதைக் சுட்டி சமுதாய நிலையைச் சாடுகின்றார்.

இவ்வாறாய்ப் பாடல் இடையிட்ட உரைநடை உத்திவழி சமுதாயச் சாடலைப் பசுமரத்து ஆணியாக. ஐயன் பதித்துள்ளார்.

அடிகள் ஆசிரியரின் தமிழ்ப்பற்றுறுதி

இந்நாடகமெங்கும் ஐயனின் தமிழ்ப்பற்று நன்கு விளங்குகின்றது.

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்ப(து) இல்.

என்ற தீர்வைத் தந்த வழியும், நாடக மாந்தருள் பரிமேலழகரை அமைத்துள்ளமையாலும், ஆசிரியரின் திருக்குறள் பற்று நன்கு விளங்குகின்றது.

சேனாவரையர் என்ற நாடக மாந்தர் படைப்புவழி ஆசிரியரின் தொல்காப்பியப் பற்றை அறிய முடிகின்றது.

நல்ல மாந்தர்க்குச் சோமசுந்தரம், ஞானசம்பந்தம் என பெயர்களைச் சூட்டியவழி ஆசிரியரின் தெய்வப்பற்றும், சமய உணர்வும் ஒளிர்கின்றன.

தமிழை இழித்த ஆய்வாளரைச் சாடும் சேனாவரையர் வழி

> 'தமிழ்நாட்டில் பிறந்திருந்தும், தமிழைச் சிறிதும் கற்காமல், ஆங்கிலங் கற்றசிலர் தமிழையும், தமிழ்க் கற்றவரையும் இகழ்ந்து வருகின்றனர்.'
>
> 'தமிழை இகழ்ந்து கூறின் உணர்ச்சி தோன்றுங்காலத்தில் உங்களைப் போன்ற கோடாரிகளுக்கு எல்லாம் நிச்சயம் அழிவுண்டாகும் என்று எச்சரிக்கின்றேன்.'
>
> 'என்னைத் திட்டட்டும், என்னை இழிவுபடுத்திப் பேசட்டும் நான் பொறுத்துக் கொள்கிறேன்... ஆனால் எனது மூதாதையரால் பேசப்பட்டு இன்றளவும் அழியாமல் வாழ்ந்திடும் நம் கன்னித் தமிழ் மொழியை ஒரு கயவன் இகழ்ந்து கூறினால் நாம் பொறுமையோடு இருக்கலாமா?'

எனும் உரையாடல்களின் வழி ஆசிரியரின் மொழிப்பற்றுறுதியைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஐயன் அடிகளாசிரியரின் தமிழ்ப்பற்றுறுதியில் நாமும் இரண்டறக் கலப்போம்.

நிறைவுரை

இத்தகு விழுமியங்கள் நிறைந்த ஐயன் அடிகளாசிரியரின் தொடக்கப்பள்ளி என்னும் நாடகம் நம்மை மகிழ்விக்கிறது; அல்லன அகற்றி நல்லன கொண்டுய்ய வழிகாட்டுகிறது.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் அணிசேர்க்கும் ஐயன்அடிகளாசிரியர் புகழ் ஓங்குவதாகுக. ஐயன் இன்னும் பன்னூறு ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்து தமிழுக்கு வளம் சேர்ப்பாராகுக.

கய்யூட்டாம் பொய்யூட்டுக் குற்றமும் பாவமே!
மெய்யூட்டாம் காமமும் பாவமே - தொய்வகற்றி
வேண்டாமை விட்டு விழுமியம் நாடுதல்
ஈண்டறம்; வைய்க் கடன்.

வாழ்க வையகம்! வாழ்க சீரடிகள் புகழ்!

இவண்

(பூவை. சு. செயராமன்)

உ
இறைவன் துணை.

தொடக்கப்பள்ளி.

உறுப்பு - 1

இடம் : கொசுப்பட்டிப் பள்ளிக்கூடம்.

காலம் : மாலை ஐந்து மணி.

உரியவர் : ஆசிரியர் நல்லசாமி, சட்டாம்பிள்ளை இராமன், பள்ளிக்கூடப்பையன்கள் சுப்பன், சஞ்சீவி, கூழையன், கோவிந்தன், வையாபுரி.

ஆசிரியர் நல்லசாமி : அடேய் பையன்களா! நாளைக்கி நம்ம பள்ளிக்கூடத்துக்கு டிப்டி இன்சுபெட்டர் வரப்போரார்; நீங்கள்ளாம் கோளி கூப்பிடவே வந்தூடுணும் தெரியுமா? அடேய் சுப்பா! ஒங்கத் தெருவுலே சும்மா திரிஞ்சுக்கிட்டிருக்கிற மொந்தையன், முட்டைக் கண்ணன், நொள்ளையன் இவுங்களையெல்லாம் வாத்தியார் கடலைப் பொரி கொடுப்பாருண்ணு, கூட்டமா அழைச்சுக்கிட்டு வாடா.

சுப்பன் : அப்படியே அயைச்சுக்கிட்டு வர்றாங்க.

சட்டாம்பிள்ளை : இனிசுபட்டரு நாளைக்கு எந்நேரத்துக்குங்க வருவாங்க?

ஆ. நல்லசாமி : அடே அவிங்க இட்டம் எப்பவாவது வருவாங்க ; ஆனால், நீங்கள்ளாம் கறுக்கல்லியே வந்தூடுணும் தெரியுமா?

சுப்பன் : நாங்க நாத்திரிக்குச் சோறு குடிச்சூட்டு பள்ளிக்கூடத்திலியே வந்து படுத்துக்கிறங்க.

ஆ. நல்லசாமி : ஏய் பையன்களா! யாரார் வீட்டுலே நெய் பால் இருக்குது?

சஞ்சீவி : நம்ம கூளையன் வீட்டிலிங்க ; நம்ம கருத்தான் வீட்லிங்க; நம்ம இவெனிருக்காம் பாருங்க அவனூட்டிலிங்க.

ஆ.நல்லசாமி : ஏய் கூளையா! நாளைக்கி இன்சுபெட்டருக்குப் பால் கொண்டாறியாடா?

கூழையன் : எங்கையா பாலைக் கன்னுக்குட்டிக்கி விட்டூட்ராங்கங்க ; கோமயம் புடிச்சாரூட்டுங்களா?

ஆ. நல்லசாமி : முண்டம்! முண்டம்!! கோமயத்தை என்னடா பண்றது?

கூழையன் : இனுசுபட்டருக்கு அவிசேகம் பண்ணக் கூடாதுங்க? எங்கையா, அண்ணைக்கிக் கோமயத்தைப் புடிச்சு புள்ளையாருக்கு அவிசேகம் பண்ணுனாங்களே!

ஆ.நல்லசாமி : அடே முண்டம்! இனிசுபெட்டரைப் புள்ளையாருண்ணா நினைச்சுக் கிட்டே? அவரு நம்மளாட்டம் மனுசன் தாண்டா!

சட்டாம் பிள்ளை : அண்ணைக்கொரு நாளு இனிசு பட்டரை சாமி சாமீண்ணு கும்பிட்டிங்கள்ளே; அதைப் பார்த்தூட்டு இனிசு பட்டரைப் புள்ளையார் சாமீண்ணு நெனைச்சுப் புட்டானுங்க கூளையன்.

ஆ. நல்லசாமி : ஏய்! பச்சை மொளவா, அவரக்கா, பொடலங்கா யார் வீட்டுலியாவது இருக்குமாடா?

கோவிந்தன் : நம் தொரச்சாமி ஊட்டுக் காட்டிலிங் பச்செ மொலவாச்செடி யிருக்குதுங்க; காயில்லீங்க!

வையாபுரி : இல்லிங்க பூப்பூத்திருக்குதுங்க!

கோவிந்தன் : நீ எப்படாப்பா பாத்தே?

வையாபுரி : நாதான் மாடு மேய்க்கறப்ப பாத்தனே!

கூழையன் : எங்கக் காட்டுலே தொவரங்கா யிருக்குதுங்க இனிசுபட்டருக்குக் கொண்டாருட்டுங்களா?

ஆ. நல்லசாமி : போடா முண்டம்! கோமயம் புடிச்சாரானாம், தொவரங்காக் கொண்டாரானாம், போக்கிரிப்பயல்! ஏய் பையன்களா! நீங்கள்ளாம் போயிட்டு பள்ளிக் கூடத்துலே கடலைப்பொரி கொடுப்பாங்கண்ணு ஓங்கத் தெருவுலேயிருக்கிற பையன் களையெல்லாம் அளைச்சுக்கிட்டு வந்தூட்ரிங்களா ; வராவிட்டா பிரிகட்டி இளுத்து விடுவேன் தெரியுமா?

பையன்கள் : அப்படியே வந்தூட்ரங்க.

(போகின்றனர்)

(திரை)

உறுப்பு – 2

இடம் : கொசுப்பட்டிப் பள்ளிக்கூடம்.

காலம் : காலை நேரம்.

உரியவர் : ஆசிரியர் நல்லசாமி, பள்ளிக்கூட மாணவர் குடியானவர் இருவர்

(மாணவர் பள்ளிக்கூடத்தைக் கூட்டி மெழுகுகின்றனர்; ஆசிரியருடன் பெட்டியில் வைத்திருக்கும் படம் முதலியவற்றை எடுத்து மாட்டிப் பள்ளிக்கூடத்தை அழகு செய்கிறனர்)

ஆ. நல்லசாமி : ஏய் பையன்களா! பள்ளிக்கூடமெல்லாம் மொளுவியாச்சாடா?

பையன்கள் : எல்லாம் மொளுவியாச்சுங்க.

ஆ.நல்லசாமி : ஏய் சட்டாம்பிள்ளை! பையன்களெ குதிக்காத பாத்துக்கோ, நான் இன்ஸ்பெட்டருக்கு நெய், காய் கறியெல்லாம் பாத்து வாங்கிட்டு வர்றேன்; ஏய் சஞ்சீ! நம்ம கோவிந்தன் வீட்டுலேபோய் வாத்தியார் சொன்னாங்கண்ணு பாலுக்குச் சொல்லீட்டு வாடா!

(ஆசிரியர் வெளியே போதல் ; கொஞ்ச நேரம் கழித்து இரண்டு குடியானவர் பள்ளிக்கூடத்துள் நுழைதல்)

ஒரு குடியானவன் : (சட்டாம்பிள்ளையைப் பார்த்து) எங்கடாப்பா வாத்தாரு?

சட்டாம்பிள்ளை : அவுங்க இண்ணைக்கி டுப்டீன்சுபட்டரு வர்றாங்கண்ணு காயி நெய்யில்லாம் வாங்கப் போயிருக்காங்க.

மற்றொரு குடியானவன்: இன்னைக்கித் துப்பட்டி இனிசுபட்டரா வரப்போராரு? அதான் இந்தக் கடுதாசில்லாம் மாட்டி, பசங்கள்ளாங், கும்பலா வந்திருக்கானுவளா?

ஒரு குடியானவன் : (சட்டாம்பிள்ளையைப் பார்த்து) என்னடா ஆளே! இந்தக் கடுதாசீலே எளுதி ஒட்டிருக்குது?

சட்டாம்பிள்ளை : அதான் இந்தப் பள்ளிக் கூடத்துப் பேராம்.

ஒரு குடியானவன் : அந்தக் கடுதாசீலே கொசுப்பட்டி எலிமெண்டரி இஸ்கூலுண்ணுல்லே எளுதிருக்கு; கொசுப்பட்டீண்ணா ஊருப் பேரு; இஸ்கூலுண்ணாப் பள்ளிக் கூடம்; எலிமெண்ட் ரீண்ணா அது என்னடா ஆளே?

சட்டாம்பிள்ளை : அது தெரியாதாங்றேன்? அதான் போன மாசத்துலே பள்ளிக்கூடத்துலே மல்லாக் கொட்டை கொட்டி வைச்சிருந்தாங்க. நெல்லுக் காயவைச்சிருந்தாங்கல்லே; அதை எலி வந்து மென்றது அதான் எலிமென்றி இசுக்கூலுண்ணு பேருவைச்சுப்புட்டாங்க.

(எல்லாரும் நகைக்கின்றனர்)

ஒரு குடியானவன் : இந்தரா ஆளே! பள்ளிக்கூடத்துலே ரவ்வு பவலா எப்பவும் நம்ம வாத்தாரு சீட்டுதான் ஆடிக்கிட்ருக்காரு; ஏன்! சீட்டாடுற பள்ளிக்கூடம்னு, இல்லா விட்டாக் குறட்டைப்புராணப் பள்ளிக் கூடம்னுகூடப் பேரு வைக்கிலாமே!

மற்றொரு குடியானவன்: இல்லேங்றேன் ! துப்பட்டி இனிசுபட்டரு வரச்சே பசங்களேல்லாம் கள்ளைப்பொரி குடுக்றேண்ணு கூட்டியாந்து அவுருக்கு ரெண்டு நெய் பால் வாங்கிக் குடுத்துச் சரிப்படுத்தி சருக்காரு பணத்தை நம்ப வாத்தாரு கொள்ளை அடிச்சிக்கிட்டுருக் காரில்லியா! அதனாலே, சருக்காருப் பணத்தைக் கொள்ளை அடிக்கிற கொசுப்பட்டிப் பள்ளிக்கூடம்னு பேருவைக்கிற தாங்றேன் பொருத்தம்.

ஒரு குடியானவன் : ஆமாங்றேன்! ஆமாங்றேன்!! நல்லா சொன்னிங்க நம்ம வாத்தாரு சோசியம் பாக்றாரு; வயித்தியம் பண்றாரு; யாபாரம் செய்யுறர்ரு; நாலு பசங்களைக் கும்பலாக் கூட்டிவைச்சு பள்ளிக்கூடமும் நடத்துறாரு; பேருக்குத்தான பள்ளிக்கூடம்; பசங்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்றதேல்லே!

(பாடுகிறார்)

ஆறு மாசம் படிச்சும் - ஒரு
ஆனா வல்லியே
அதுக்கு மேலே படிச்சும் - ஒரு
அறுவும் வல்லியே
போன வருசம் படிக்க - வைச்சுப்
பொளப்புக் கெட்டுதே
போதும் போதும் பையன் - படிப்புப்
பொருளும் முட்டுதே.

மற்றொரு குடியானவன் : ஆகா! ஆகா!! பாட்டு நல்லாருக்குதுங்க! பள்ளிக்கூடம் நல்லா நடக்குதாண்ணு மேலேயிருக்கிற அதிகாரிவாள் கவனிச்சாத்தாங்களே! வாத்தாரு ரெண்டு காயி கீயி வாங்கிக் கொடுத்தாருண்ணா வாங்கிக்கிட்டு நல்லா எளுதிப்புட்டுப் பூட்டாங்கண்ணா கிராண்டு வந்தூடுது; பசங்களுக்குப் படிப்பு எங்கே வருங்க?

ஒரு குடியானவன் : ஆமாங்றேன்! எல்லாம் மோசமாத்தான் இருக்குது! என்னா பண்றது? எங்றேன்! இண்ணைக்கித் துப்பட்டி இனிசுபட்டரு வரப்போறாராமே வாத்தாருக்கிட்டேச் சோசியம் எங்கப் பாக்கமுடியும்?

மற்றொரு குடியானவன்: சரிதான் இன்னொரு நாளைக்குப பார்த்துக்கிட்டாப்போவுது.

(குடியானவர் வெளியே போதல்)

(திரை)

உறுப்பு – 3

இடம் : கொசுப்பட்டிப் பள்ளிக்கூடம்.

காலம் : பிற்பகல்.

உரியவர் : டிப்டி இனிசுபெக்டரும், பியூனும், ஆசிரியரும் பையன்களும்.

(டிப்டி இனிசுபெக்டர் பியூனுடன் கொசுப்பட்டிப் பள்ளிக் கூடத்துள் நுழைகிறார்)

மாணவர்கள் : (தலைவலி வந்தவர் கையால் தலையைப் பிடித்துக் கொண்டிருக்கிற மாதிரி கையைத் தலையில் வைத்துக் கொண்டு) குடுமீங்க சார்ர்ர்ர்ர்ர்.

(இனிசுபெக்டர் வந்த நகைப்பை அடக்கிக் கொண்டு வருகைப் பதிவு எடுக்கின்றார்)

இனிசுபெக்டர் கோவிந்தன் V.

கோவிந்தன் பிரடெண்ட் சார்

இனிசுபெக்டர் ராமன். A.

இராமன் பிரண்ட சார்

இனிசுபெக்டர் கூழையன் S.

கூழையன் பிரண்டை சார்

இனிசுபெக்டர் சஞ்சீவி. P.

சஞ்சீவி பிர....பிர....பிர.... சிண்டு சார்

இனிசுபெக்டர் : அட எழவே! பிரசெண்ட் சொல்றதுகூட நல்லாச் சொல்லிவைக்கப்படாதாய்யா? என்னையா பள்ளிக்கூடத்துலே வெறுமனே உட்கார்ந்து கொண்டு மாரடிக்கறே?

ஆ. நல்லசாமி : அவனுக்கு ஒவ்வொரு தரம் திக்குவாயிங்க எசமானே!

இனிசுபெக்டர் : மற்றவாளுக்கெல்லாம் நல்லா சொல்லி வைச்சிருக்கிறீரா மேன்! பிரடெண்ட்டு, பிரண்டை என்கிறார்களே!

ஆ.நல்லசாமி : இங்கிலீசு வாத்தை பையன்களுக்கு வாயிலே நொளையறதில்லிங்க எசமானே!

இனிசுபெக்டர் : உமக்கு நுழைஞ்சால்லே பாய்சுகளுக்கு நுழையும்; ஏதாவது ராஜ வாழ்த்து உளறிவைத்திருக் கிறீராமேன்?

ஆ.நல்லசாமி : ஏதோ கொஞ்சம் பாடுவானுவங்க, டேய்! ராசா வாத்து பாடுங்கடா!

மாணவர்கள் : (தாளத்துக்கிசைய தலையை அசைத்துக் கொண்டு பாடுகின்றனர்)

வால்க வால்கவே மண்ணை (மன்னன்) வால்கவே
ராசநீதி மாறிடாத நீசன் (நேசன்) வால்கவே.

இனிசுபெக்டர் : (மிக்க சினத்துடன்) ஓய்! என்னாங்காணும் அறிவற்ற மனுஷன்! இப்படித்தான் ராஜ வாழ்த்து சொல்லிக் கொடுக்கிறதா? மன்னன் என்பதற்கு மண்ணை என்றும்; நேசன் என்பதற்கு நீசன் என்றும் உளறுகிறான்களே!

ஆ. நல்லசாமி : (நடுநடுங்கிக் கொண்டு) என்ன பண்றதுங்க? பட்டிக்காட்டுப் பயகள் வாயிலே நல்லா நொளைய மாட்டேங்குதுங்க!

(அப்பொழுது ஆசிரியருடைய வேலைக்காரன் இரண்டு படி புத்துருக்கு நெய்யை வாங்கிக் கொண்டுவந்து மேசைமேல் வைக்கிறான்)

இனிசுபெக்டர் : (வந்த சினத்தை அடக்கிச் சிரித்துக் கொண்டு) வாத்தியாரய்யா! நீரே ஒரு பாட்டுச்சொல்லி ஒரு பையனைப் பாடச்சொல்லும் பார்ப்போம்.

(வேறு பள்ளிக்கூடத்தில் படித்து விடுமுறையில் வந்திருக்கும் சுப்பிரமணியன் என்பவனைக் கூப்பிட்டு நான் சொல்லுகிறபடி நீ சொல் என்று கட்டளையிட்டுவிட்டு ஆசிரியர் அரிச்சந்திர நாடகத்தில் ஒரு பாட்டுப் பாடுகிறார்.)

ஆ. நல்லசாமி : அரிச்சந்த்ர ராசன் வந்தானைய்ய்ய் ஒய்யாரமாக ; அரிச்சந்த்ர ராசன் வந்தானைய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்

சுப்ரமணி : அரிச்சந்திர ராஜன் வந்தானே ஒய்யாரமாக : அரிச்சந்திர ராஜன் வந்தானே.

ஆ. நல்லசாமி : அடே முட்டாள்! என்ன தப்புத்தப்பா ஒளர்றே? நான் சொல்றபடி சொள்ளேண்டா!

இனிசுபெக்டர் : போதும் போதுமையா உங்கள் பாட்டு ! பாட்டாம் பாட்டு! கிராண்ட்டு மட்டும் நிறையா வேணும் ! நல்லாச் சொல்ற பையனைக்கூடத் தப்புப் பண்றீரையா!

ஆ. நல்லசாமி : (கையைக் கட்டிக் குனிந்துக் கொண்டு)என்னமோ எசமானே ! எனக்குத் தெரிஞ்சதே வஞ்சக மில்ளாமே சொள்ளிக் குடுக்றேனுங்க! ஏளைமேலே எரக்கம் வைக்கணுங்க!

இனிசுபெக்டர் : ராமன் என்னும் பையன் யார்?

இராமன் : ஏனுங்க நாதான்.

இனிசுபெக்டர் : உனது பாடப்புத்தகம் எங்கே?

இராமன் : புயுத்துக மூட்டேலே இருக்குதுங்க.

ஆ. நல்லசாமி : எட்ரா அதை.

(பையன் புத்தகத்தை எடுத்து இனிசுபெக்டர் கையில் கொடுக்கிறான் அவர் அதில் கண்ணன் பாடத்தைக் காட்டி படிக்கச் சொல்லுகிறார்.)

இனிசுபெக்டர் : ராமன் ! இந்தப் பாடத்தைப் படி.

(இராமன் புத்தகத்தை மூடிவிட்டுக் (கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய்: அண்ணன் எழுதிய கடிதம் எங்கே? என்று தொடங்கும் பாடத்தைக் கீழ்க்கண்டபடி உளறுகிறான்.)

இராமன் : கண்ணைத் திண்ணு பண்டம் வெண்ணை
அண்ணெ எயுதிய கடுதாசி யங்கே

இனிசுபெக்டர் : ஏய் ! நிறுத்து நிறுத்து : உன்னைப் பார்த்துப் படியடா வென்றால் பாராமல் உளறுகின்றாயே !

இராமன் : நாங்க பாராமெ தாங்க ஒப்பிப்பம் வாத்தியாருக்கிட்ட .

இனிசுபெக்டர் : என்ன வாத்தியாரே ! இந்த வசனத்தேல்லாம் தப்புந்தாறுமா இப்படித்தான் பொட்டெ நெட்டுரு போடச் சொல்றீமா?

ஆ.நல்லசாமி : அப்படிப் பாராமெ சொன்னாத்தாங்க பட்டிக்காட்டுலே அல்லாத்துக்கும் புடிக்குங்க!

இனிசுபெக்டர் : புடிச்சு பாழாய்ப் போச்சு : ஏய் ராமன்! (பதம் பிரித்து) வெண்+நெய் உனக்குத் தெரியுமா?

இராமன் : தெரியாதுங்க .

இனிசுபெக்டர் : பின் என்ன தெரியும்?

இராமன் : மாட்டு நெய்தான் தெரியுங்க.

இனிசுபெக்டர் : அதை என்னடா பண்றது கோவிந்தன்!

கோவிந்தன் : அதை விப்பாங்கங்க.

இனிசுபெக்டர் : இன்னும் என்னடா பண்ணலாம் கூளையன் !

கூழையன் : அம்மாசி வந்தா ஊத்தித் திங்கலாங்க: அப்புறம் தீவிளி வந்தா ஊத்தித் திங்கலாங்க பொங்க வந்தா ஊத்தித் திங்கிலாங்க.

இனிசுபெக்டர் : வாத்தியாரே ! பையன்களுக்குப் பாடம் வெகு ஜோரா சொல்லி வைச்சிருக்கிங்கையா.

ஆ. நல்லசாமி : என்னமோ எசமாங்க இந்த நாய்க்குட்டியைக் காப்பாத்துனுங்க.

இனிசுபெக்டர் : (போர்டில் இடம்பட வீடிடேல் என் பதை எழுதுகிறார்) கூளையன் ! போர்டில் எழுதியிருப்பதைப் படி.

கூழையன் : இடம்ப விடேல் .

இனிசுபெக்டர் : வாத்தியாரே ! பையன் சொல்வதைத் திருத்தும்.

ஆ. நல்லசாமி : (கூளையனைப் பார்த்து) டேய் ! இடம்பட படபடேல் என்று திருத்தமாகச் சொல்லடா !

(இனிசுபெக்டர் மிகவும் சிரிக்கின்றனர்)

இனிசுபெக்டர் : யார்ரா சஞ்சீவி ! பெருக்கல் வாய்பாடு தெரியுமா ?

சஞ்சீவி : திரியுங்க .

இனிசுபெக்டர் : எட்டாவது வாய்பாடு சொல்லு .

சஞ்சீவி : (உரந்து) ஏ டோண் ஏட்டு; எட்டு நண்டு பன்னுறு; ஏ மூணு இருவத்திப்பத்து; ஏ நாலு நுப்பத்திரண்டு ; எட்டாறு நாப்புயித்தெட்டு; எட்டுக் கொட்டு அறுவத்தினாலு; எட்டுடப் பன்னொா ஏம்புயுத் தெட்டு.

இனிசுபெக்டர் : (காதைக் கையால் அடைத்துக் கொண்டு) போதும் போதுமப்பா பெருக்கல் வாய்பாடு நிறுத்து ! நிறுத்து! வாத்தியாரே ! பையன் வாயிலே பெருக்கல் வாய்பாடு அகப்பட்டுக் கொண்டு அடாடா டாடா ! படாத அவஸ்த்தைப் படுதுங்காணும்!

(இனிசுபெக்டர் பள்ளிக்கூடத் தோட்டத்தைப் பார்வையிட்டார். பிறகு பார்வைக்குறிப்பு எழுதுவதற்கு பார்வை புத்தகத்தை விரித்தார். அதில் இரண்டு பத்துஉரூபாய் நோட்டுகள் வைக்கப்பெற்றிருந்தன; அவற்றை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு பார்வைக்குறிப்பு (விசிட்டு நோட்டு) எழுதுகிறார்)

பார்வைக் குறிப்பு : இன்று இப்பள்ளிக்குடம் கிராண்டிற்காகப் பரீட்சை செய்யப்பட்டது. ரோலிலுள்ள அறுபது பிள்ளைகளும் வந்திருந்தனர்; உபாத்தியாயர் இருவரும் ஆஜர். பள்ளிக் கூடத்திற்கு வேண்டிய எல்லா உபகரணங்களும் தயார் செய்யப்பட்டுள்ளன. பையன் களுக்குப் பாடல்கள் கற்பிக்கப் பெற்றுள்ளன. அவர்கள் எல்லாப் பாடங்களையும் ஞாபகமாகச் சொல்லுகின்றனர். பள்ளிக்கூடம் நன்கு நடைபெறுகின்றது. மூன்று உபாத்தியாயர் வேலை செய்தால் நன்றாயிருக்கும் என்று எழுதிமுடித்தார்.

ஆனால் கைக்கூலி வாங்காமல் உண்மையாக எழுதினால் கீழ் வருவனவ உண்மையாகும்.

(இன்று இருபது பிள்ளைகளே வந்திருந்தனர். ஒரு உபாத்தியாயரே ஆசர். பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய உபகரணங்கள் உடைந்த நாற்காலி 1, சுவரில் கரிபூசின போர்டு 1 , உடைந்த டேபிள் 1, பையன்கள் உட்காரும் அரசம் பலகை 2, கோபிகா வத்திராபகரணப் படம் உள்ளிட்ட ஐந்து படங்கள் ஆகும் . இவையன்றி இனிஸ்பெக்டருக்கு, வேண்டிய பச்சை மிளகாய், புடலங்காய், வெண்டக்காய், கத்திரிக்காய், அவரைக்காய், பலாப்பிஞ்சு, நெய் முதலான உபகரணங்களும் நன்கு தயார் செய்யப்பட்டிருந்தன. மாணவர் நிலை சுத்த மோசமாகும்)

இனிசுபெக்டர் : ஏய் பியூன்!

பியூன் : எசமான்! இதோயிருக்கிறேன்.

இனிசுபெக்டர் : சோழபுரம் கிறுக்கு வாத்திக்கிட்டே நீ முன்னே போய், ஐயா பரீட்சை செய்ய பள்ளிக்கூடத்திற்கு வர்ராங்கண்ணு சொல்லுடா, இல்லாத சட்ட மெல்லாம் பேசுவான் கழுதை ! நாலரை மணிக்கு மேலே ஒரு நிமிசம் ஆனால்கூட வச்சிருக்கமாட்டானாம் கூலை. இந்த வருசம் வயிற்றிலே மண்ணடிக்கிறேன்; (உதவியாளரை அருகில் கூப்பிட்டு) ஒரு வாத்தியார் ஒன்றுக்குப் பத்து ரூபாய் என்று நான் சொன்னத்தை ஞாபகமாகக்கேள்றா .

பியூன் : அப்படியே கேக்கிறேனுங்க எசமானே!

(பியூன் போகிறான்)

(இனிசுபெக்டர் பழமும் இரண்டு குவளைப் பாலும் சாப்பிட்டுவிட்டு வெற்றிலைப்பாக்கு முதலியனவெல்லாம் போட்டுக்கொண்டார். ஆசிரியர் அழகான பெட்டி வண்டி ஒன்றைத் தயாரித்துக் கொண்டுவந்து நிறுத்தினார். இனிசுபெக்டர் காய்கறி, மூட்டைகளுடன் ஏறிக்கொண்டார். ஆசிரியர் வண்டியின் பின்புறம் உட்கார்ந்து கொண்டார். ஆசிரியர் செவிட்டு வேலையாள் வண்டியை ஒட்டிச் செல்கிறான். வண்டிக்குள் இருவரும் பேசிக்கொண்டு செல்கின்றனர்.)

இனிசுபெக்டர் : என்ன வாத்தியாரே ! நான் வண்டியேற வந்தபோது கருப்பு சேலை கட்டிக்கொண்டு சோக்காய் ஒரு பேர்வழி நின்றுக் கொண்டிருந்தாளே அவள் யார்?

ஆ . நல்லசாமி : அவளுங்களா? நம்ப ஊருக்கு அரைமயில்லெ பொடையூருண்ணு இருக்குதுங்க அந்தூருலே யிருந்து இங்கேவந்து கடைவச்சிருக்காளுங்க அவள் புருசன் பினாங்குக்கோ சிங்கப்பூருக்கோ பூட்டானுங்க.

இனிசுபெக்டர் : அவள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாளெ காண்டக்டு மோசமா ?

ஆ. நல்லசாமி : அவுங்க ஊரே கண்டிராக்டு மோசந்தானுங்க.

இனிசுபெக்டர் : அதெப்படி வாத்தியாரே !

ஆ. நல்லசாமி : பொண்டாட்டி யத்தவன் பொடையூருக்குப் போண்ணு எல்லாரும் பளமொளி சொல்றாங்க; இதுலெயிருந்தே புரிஞ்சுக்குங்களேன் !

இனிசுபெக்டர் : அப்படியா ? அப்படின்னா நல்ல உருப்படி அங்கு கிடைக்குமா?

ஆ. நல்லசாமி : பொடையூருலேயுங் கிடைக்குங்க கொசுப்பட்டீலியுங் கிடைக்குங்க ; எ ச மா னு க் கு க் கூ ட அதுமேலெபிரியம்ணு கேள்விப்பட்டு ரெண்டு உருப்படி கூடத் தயார்

பண்ணிவைச்சேனுங்க ; ஆனா எசமாந்தான் ராத்தங்கதெ ஊருக்கப் போறிங்களே !

இனிசுபெக்டர் : இன்னம் ஒரு பத்து நாள் கழித்து வந்து தங்குவேனையா ; வாத்தியாரே! உம்மை விரட்டினேனல்லவா? நீர் எங்கே கோபித்துக்கொள்றீரோ என்று நினைத்தேன் .

ஆ. நல்லசாமி : எனக்கு அம்புட்டுத் தெரியாதுங்களா எசமானே ! என்னமோ தங்க கிருபா கடாச்சத்தினாலே நாக்குட்டி பொளைக்கணுங்க .

(அப்பொழுது சோழபுரம் சென்ற பியூன் எதிரில் வருகிறாள்)

இனிசுபெக்டர் : பியூன் ! என்ன விசேஷம் ? சோழபுரம் கிறுக்கு வாத்தி என்ன சொன்னான்?

பியூன் : நான் என்ன சொல்றது எசமானே ! அந்த வாத்தியார் எசமானுண்ணு கொஞ்சங்கூட மதிப்பு வக்கிலிங்க ; அவுங்கப் பள்ளிக்கூடம் ரொம்ப ஒளுங்கா நடக்ற பள்ளிக் கூடங்களாம். அதுனாலே எசமானுக்கு ஒரு சல்லிக்காசுகூட குடுக்கவேண்டீதில்லைங்களாம் ; எசமான்தான் ஏதாவது அவுங்களுக்குக் குடுக்கனுங்களாம்.

இனிசுபெக்டர் : (மிக்க சினத்துடன்) அப்படியா விசயம்? அவங்க பள்ளிக்கூடம் ஒழுங்கான பள்ளிக்கூடமா? ஒழுங்கான பள்ளிக்கூடத்தெல்லாம் இன்றைக்குப் பரீட்சையில் பார்த்துடறேன் ; வேகமா ஓட்டப்பா வண்டியை !

(திரை)

உறுப்பு – 4.

இடம் : **சோழபுரம் பள்ளிக்கூடம் .**

காலம் : **மாலை மணி 5.**

உரியவர் : **டிப்டி இனிசுபெக்டரும் , சோழபுரம் ஆசிரியர் பரிமேலழகரும் , சோமசுந்தரர் சேனாவரையரும் மாணவரும், நாட்டாண்மையும்**

(இனிசுபெக்டர் பள்ளிக்கூடத்துள் நுழைகின்றார்)

மாணவர் : **(கை கூப்பிக்கொண்டு) வணக்கம் ஐயா!**

(ஐயாப்பட்டமா! இனி அம்மாப்பட்டம் போட்டுக்கொண்டு பால் குடிக்க வந்தாலும் வந்து விடுவார்; உங்களையெல்லாம் குட்டிச்சுவாரக்கி விடுகின்றேன் என்று மனத்துக்குள் இனிசுபெக்டர் மனத்துக்குள் முணுமுணுத்துக் கொள்கிறார். மாணவர் வாழ்த்துப் பாடுகின்றனர்.)

வாழ்த்து

வாழ்க செந்தமிழ் வையகம் ஓங்குக
வீழ்க தண்புனல் வெல்கநம் வேத்தியல்
ஆழ்க தீயவெல் லாம்அறி வோர்களே
சூழ்க மற்றவர் சொற்றிறம் பல்கவே .

(இனிசுபெக்டர் வருகைப்பதிவு எடுத்தார்; அறுபத்தி நான்கு மாணவர்களுக்கு அறுபத்திரண்டுபேர் வந்துள்ளனர்.)

இனிசுபெக்டர் : **என்ன வாத்தியாரே ! அந்த இரண்டு பையன்களையும் அழைத்துக்கொண்டுவர**

நேரமில்லையா ? அதற்குள் நான் வந்துவிட்டேனா ? முந்திதான் பியூன் அனுப்பினேனே !

பரிமேலழகர் : அந்த மாணவரிருவரும் விடுமுறை பெற்றுக் கொண்டு உறவினர் வீட்டிற்குச் சென்றிருக்கின்றனர் ஐயா ! வருகைப்பதிவிலும் விடுமுறை யென்று குறித்து வைத்துள்ளேன் ; அவர்கள் விடுமுறைக் கடிதங்களும் இதோ இருக்கின்றன .

இனிசுபெக்டர் : (மாணவரைப்பார்த்து) யாரது சோமசுந்தரம் ! நீ நான்காவது வகுப்பா?

சோமசுந்தரம் : ஆம் ஐயா !

இனிஸ் : (புத்தகத்தை வாங்கிச் செய்யுட் பாடத்தை யெடுத்து)

'ஆவாரை யாரே அழிப்பார் அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்' இதற்கு உரை சொல்

சோம சுந்தரம்

ஆவாரை = ஆயுளுடன் பிறப்பவரை;
யாரே அழிப்பார்? = யார் சாகச் செய்பவர்;
அது அன்றி = அது வல்லாமல்;
சாவாரை = ஆயுளின்றி இறப்பவரை;
யாரே தவிர்ப்பவர்? எவர் தடுப்பவர் ?

இனிசுபெக்டர் : ஆவாரை யென்றால் பிறப்பவரை என்றா அர்த்தம் ? பணக்காரர் ஆகின்றவர்களை என்று சொல்லக்கூடாதா ?

சோம சுந்தரம் : அப்படியும் சொல்லலாம் ! அடுத்து சாவாரை? என்றபடியால் அதற்கினமாக ஆவாரை என்றதற்குப் பிறப்பவரை என்று கூறுதலே பொருத்த முடைத்தென்று எங்கள் ஆசிரியர் கூறியுள்ளார் ஐயா.

இனிசுபெக்டர் : (இதென்ன பெரிய புடுங்கலா யிருக்கிறது பெரிய விஞ்ஞான ஆராய்ச்சி தவறிப்போகின்றதா என்று முணு முணுத்துக்கொண்டு) ஏன் மேலே *ஐயம் புகுவாரை என்று சொல்லியிருக்கவில்லையா?

சோமசுந்தரம் : சொல்லியிருந்தாலும் ஆவாருக்க அடுத்தப்படி சாவார் தானே சொல்லியிக்கின்றது ! ஐயம் புகுவார் இடைவிட்டதல்லவா?

இனிசுபெக்டர் : (மனத்திதிற்குள் வெட்கம் ; ஆனால் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு) ஆவாரை என்றதற்கு ஆயுளுடன் பிறப்பவரை என்று கூறினாயே ! ஆயுளைக் குறிக்குஞ் சொல் பாட்டிலிருக்கின்றதா ?

சோமசுந்தரம் : ஆயுளைக் குறிக்குஞ்செல் பாட்டிலில்லைதான் ஐயா ! ஆனாலும், பாட்டிற்கு உரை கூறுங்கால் மறைந்து கிடக்கும் இயைபான சொற்களை யெல்லாம் விரித்துச் சொல்லவேண்டு

---

* *ஆவாரை யாரே அழிப்பார்; அதுவன்றிச்*
சாவாரை யாரே தவிர்ப்பவர்; - ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்;
மெய்யம் புவியதன் மேல்

மென்றும், அங்ஙனம் விரிப்பன வற்றை இசை எச்சமென்று கூறல்வேண்டுமென்றும் எங்கள் ஆசிரியர் கூறியுள்ளனர் ஐயா !

இனிசுபெக்டர் : என்ன வாத்தியாரே ! பையன் புத்தகப் பூச்சியாகத்தான் இருக்கிறான். கொஞ்சங்கூட 'லௌகீகமே' தெரியவில்லை, ஆங்கிலம் படிக்காமல் உட்கார்ந்து கொண்டு நான்தான் பெரிய படிப்பாளியென்று அகம் பாவம் பிடித்துப் போயிருக்கிற உம்மைப்போன்ற வாத்தியாருக்கிட்டெ படிச்சா எந்தப் பையனையா உருப்படப் போகிறான் ? இசை எச்சம் மசை எச்சமன்று என் னென்னமோ உளறுகிறானே இந்தப்பையன்!

பரிமேலழகர் : (ஒன்றும் பதில் சொல்லாமல் சிரிக்கிறார்)

இனிசுபெக்டர் : யாரது நான்காவது வகுப்பு ஞானசம்பந்தன் ! முனிக்கரசு கையான் முகந்து முழங்கும் பனிக்கடலு முண்ணப்படும் இந்தச் செய்யுளை அன்வயம் செய் !

(இனிசுபெக்டர் அன்வயம் என்றால் பதம் பதமாகப் பிரித்தல் என்று கருதிக்கொண்டிருக்கிறார்)

ஞானசம்பந்தன் : முனிக்கரசு எழுவாய்; உண்டல் பயனிலை; கடல் செயப்படுபொருள் ஆனால் கடல் என்னும் செயப்படுபொருள் இங்கு கருத்தாவாய் உள்ளது ; அதைக் கரும கருத்தா என்று

கூறுவர். முனி விசேடம் ; அரசு விசேடியம் ; முழங்குதலும் பனியும் விசேடம் ; கடல் விசேடியம் .

இனிசுபெக்டர் : (கோபமாய்ப்) படிச்சத்தை எல்லாம் சம்பந்தம் இல்லாமல் என்னிடம் உளறுகிறாயா? அன்வயம் பண்ணு என்றால் எழுவாய் பயனிலை சொல்றியே முட்டாள்!

ஞான சம்பந்தன் : (பயத்துடன் பணிவாக) அன்வயந்தான் செய்தேனையா!

இனிசுபெக்டர் : அன்வயம் என்றால் என்ன? வாத்தியாரே!

பரிமேலழகர் : அன்வயம் என்றால் விசேடம், விசேடியம், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் ஐந்தையும் ஓர் செய்யுளுக்கோ தொடர் மொழிக்கோ கூறல் வேண்டும் ஐயா!

இனிசுபெக்டர் : இது எந்த அகராதி நிகண்டில் சொல்லியிருக்கிறது?

பரிமேலழகர் : வேதாந்த சூடாமணியில் "கோத்துரை செய் விசேட விசேடியம் கருத்தாகருமம்கொள் கிரியை இவை யந்நுவய இலக்கணமாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது ஐயா!

இனிசுபெக்டர் : ஓகோ அப்படியா! தமிழ்ப் படிச்சவாளுக்கே மண்டேலே முளையே? யிருக்காதே! கோமணத்தைக் கட்டிக்கொண்டு

ஓட்டைக் கையிலே எடுத்துக் கொண்டு பிட்சாந்தேகீண்ணு சோம்பேறியா திரியறத்துக்கு அத்தி வாரமாக இந்தச் சின்னவயசுலேயே வேதாந்தம் சொல்லிக் கொடுக்கணும்னு ஆரம்பிச்சூட்டீரா? வாத்தியாரே!

பரிமேலழகர் : (தலையைச் சொறிந்துகொண்டு) இதெல்லாம் வேதாந்தம் இல்லை ஐயா!

இனிசுபெக்டர் : இல்லாவிட்டா நாதாந்தமோ? அல்லது சித்தாந்தமோ? வேதாந்த சூடாமணியில் இருக்கிறதென்று நீர்தானையா சொன்னீர்? யாரப்பா ராமநாதன்! சாக்பீஸ் எடுத்து நான் சொல்லுகிற வார்த்தையைப் போர்டில் எழுது. (பக்தன் கடவுளிடம் அன்பாயிருத்தலைக் கோறுகிறான். என்று இனிஸ்பெக்டர் சொல்கிறார்; (பையன் பக்தன் கடவுளிடம் அன்பாயிருத்தலைக் கோருகிறான் என்று எழுதி முடித்தான்)

இனிசுபெக்டர் : கோறுகிறான் என்று பெரிய 'று' வல்லவா போடவேண்டும்.

இராமநாதன் : கோறுகின்றான் என்று வல்லின 'று' போட்டால் கொல்லுகின்றான் என்று அர்த்தம் ஐய! அப்படி எழுதுதல்பிழை.

இனிசுபெக்டர் : அப்படியா! எத்தனையோ பெரிய பெரிய படிப்பாளிகள் எல்லாம் கோறுகிறான் என்று வல்லினந்தான் போட்டெழுதுகின்றார்;

அவர்களெல்லாம் சுத்த முட்டாள்களாக்கும்! நீங்களெல்லாம் பெரிய பிரகசுபதிகளாக்கும்! பெரிய 'று' போட்டெழுதிவிட்டால் உலகத்தார்கள் புரிஞ்சுக்கொள்றதில்லையா? தமிழ்ப் படித்தவர்களே சுத்த யூசுலெசு பேர்வழிகள்! 'லௌகீகம்' தெரியாதவர்கள்! இலக்கணம் இலக்கணம் என்று தமிழையே குட்டிச்சுவராக்குகிறார்கள்! வல்லினமாம் மெல்லினமாம்! தமிழ்ப் பாசையே ஒரு புடுங்கல் பாசை!

சேனாவரையர் : (கோபத்துடன்) ஐய! எங்களிடத்தில் சிறிதும் குற்றமில்லையே! தாங்கள் ஏதோ மனத்தில் வைத்துக் கொண்டு இங்ஙனம் பேசுகின்றீர்களே! இது தகுதியாகுமா? (உரத்த குரலில்) எங்களை எப்படி வேண்டுமானாலும் திட்டிக் கொள்ளுங்கள் ; எங்கள் உயிரினும் சிறந்த செந்தமிழ் மொழியை இழித்துப் பேச ஒருக்காலும் சம்மதியோம்!

இனிசுபெக்டர் : நாங்கள் ஒருக்காலும் தமிழை இழிவுபடுத்த வில்லை, தமிழைப் படித்த நீங்கள்தான் தமிழை இழிவுபடுத்து கின்றீர்கள்!

சேனாவரையர் : எப்படி?

இனிசுபெக்டர் : மக்களுக்குப் பாசையா? பாசைக்கு மக்களா? காலுக்குச் செருப்பா?

செருப்புக்குக் காலா? பெரும்பாலான மக்கள் கோறுகிறேன் என்பதற்குப் பெரிய 'று' தான் போட்டெழுதுகிறார்கள்; தமிழ்ப் படித்த உங்களைப் போன்ற சிலர், பெரிய 'று' போடக் கூடாது சின்ன 'ரு' தான் போட வேண்டும் என்று வம்படித்துக் கொண்டிருந்தால் மக்களுக்குத் தமிழ்ப் பாசையிலேயே ஒரு அதிருப்தி ஏற்பட்டுவிடுகிறது! யார் தமிழுக்கு இழிவு தேடுகின்றவர்களென்று நீங்களே நினைத்துப் பாருங்கள்!

சேனாவரையர் : ஐயா! நாங்களா வம்படிக்கின்றோம்? நாட்டுப்புறத்துப் பெரும்பாலான மக்களெல்லாம் டிப்டி இன்ஸ்பெக்டர் என்பதைத் துப்புட்டி இனிசுபட்ரு என்றுதான் கூறுகின்றனர்; இன்கம் டாக்சு என்பதை இண்டுமுண்டாசு வரி என்று தான் கூறுகின்றனர். ஆங்கிலம் படித்த தாங்கள் அவற்றைத் தப்பென்று திருத்தாமல் அப்படியேதான் கொள்ளுவீர்களோ? தப்பென்று திருத்தினால் ஆங்கில பாசைக்கு நீங்கள் இழிவு தேடியவர்கள்தானே? தமிழ் நாட்டில் பிறந்திருந்தும் தமிழைச் சிறிதுங் கற்காமல் ஆங்கிலங் கற்ற சிலர், தமிழையும், தமிழ்க்கற்றவர் களையும் இகழ்ந்து வருகின்றனர் என்பதை நாங்கள் நன்கு அறிந்திருக்கின்றோம்! இவ்விகழ்ச்சிக்கு

நாங்கள் ஒருக்காலும் சிறிதும் அஞ்சவில்லை! ஆனால், தமிழ்நாட்டிலே தமிழ் மக்களின் நடுவே இங்ஙனம் தமிழை இகழ்ந்து கூறின் உணர்ச்சி தோன்றுங்காலத்தில் உங்களைப் போன்ற கோடாரிகளுக் கெல்லாம் நிச்சயமாய் அழிவுண்டாகும் என்பதை உறுதியாகக் கூறி எச்சரிக்கிறேன்! (என்று கூறி ஓங்கி மேசையில் ஒரு குத்துக் குத்துகிறார்)

இனிசுபெக்டர் : என்ன கலகம் பண்ணலாமென்று ஆரம்பிச்சிருக்கிறாயா? நீ பள்ளிக்கூடம் வைச்சிருக்கிறதையும் கிராண்டு வாங்குகிறதையும் நான் பார்த்துடுரேன்! (எழுந்து வெளியே செல்கிறார்)

சேனாவரையர் : நீங்கள் கோபித்துக் கொண்டால் உதவித்தொகைதான் (இரண்டு) கிடைக்கப் பெறாது, ஆனால், தமிழ் நாட்டிலே தமிழ்ப் பொதுமக்கள் வாழ்ந்திருக்கின்றவரை அவர்களுடைய ஆதரவுகூடவா எங்களுக்குக் கிடைக்காது? அவர்கள் ஆதரவு இருக்கின்றவரை எங்கள் பள்ளிக்கூடத்தை எவரும் அசைக்க முடியாது.

பரிமேலழகர் : என்ன சேனாவரையரே! உங்களுக்கென்ன இப்படிச் சினம் வந்துவிட்டது? இவர்களைப் போன்ற

அதிகாரிகள் நம்மை மிரட்டவும் இழிவுபடுத்திக் பேசவும், நம்மைப் போன்ற ஆசிரியர் அவற்றை ஏற்றுப் பொறுமையோடிருக்கவும் ஆண்டவன் படைத்துவிட்டான்; அப்படியிருக்க அவரிடத்தில் எதற்காகப் பேச்சு வைத்துக் கொண்டீர்கள்?

சேனாவரையர் : பொறுக்க வேண்டியவற்றைப் பொறுக்கலாம் ; எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? என்னைத் திட்டட்டும், என்னை இழிவு படுத்திப் பேசட்டும் நான் பொறுத்துக் கொள்ளுகின்றேன். ஆனால், நம் மூதாதையாரால் பேசப்பட்டு இன்றளவும் அழியாமல் வாழ்ந்திருக்கும் நம் கன்னித் தமிழ்மொழியை ஒரு கயவன் இகழ்ந்து கூறினால் நாம் பொறுமையோடிருக்கலாமா?

(இப்பொழுது சோழபுரம் நாட்டாண்மைக்காரரர் வருகிறார்)

நாட்டாண்மை : ஆசிரியரையா! என்ன வருத்தமாய்ப் பேசிக் கொண்டிருக்கீங்க?

பரிமேலழகர் : வரவேண்டும்! வரவேண்டும்! இந்த நாற்காலியில் உட்காருங்கையா! நமது பள்ளிக்கூடத்திற்குப் பரீட்சை செய்ய இப்பொழுது இனிஸ்பெக்டர் வந்தார் ; அவர் முன்னாடியே பியூனை அனுப்பித்து இருபது உரூபாய் இலஞ்சங் கேட்டிருந்தார்; நாங்கள்

கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டோம் ; அதை மனதில் வைத்துக் கொண்டு, வந்தவர் பையன்களைக் கன்னாபின்னாவென்று கேள்வி கேட்டுச் சேனாவரையருடன் சண்டை பிடித்துக் கொண்டு போய்விட்டார்.

நாட்டாண்மை : ஓகோ அப்படியா சமாச்சாரம்? அந்த அயோக்கியன் நல்லுசாமிகூட இனிசுபெக்டரோடு வந்திருந்தான் போலிருக்கே!

சேனாவரையர் : ஆமாங்கையா! எல்லாம் அந்தப் பாவி செய்கிற வேலைதான் இது; முந்தி பழனிசாமி என்கின்ற டிப்டி இனிஸ்பெக்டர் இருந்தார். அவர் நன்கு தமிழ் படித்தவர்; தமிழ்ப் படித்தவர்களிடம் விருப்பமாயிருப்பார்; இலஞ்சமே வாங்கமாட்டார்; கடமை யுணர்ந்து கல்வியைப் பரப்பும் ஆசிரியரெல்லாம் அவருக்கு அன்பான தோழர்; பள்ளிக்கூடத்தை நன்கு நடத்தாமல் இலஞ்சத்தால் ஏமாற்றி உதவித்தொகை வாங்கும் சோம்பேறி களெல்லாம் அவருக்குப் பரம எதிரிகள்; ஆகையால் அவர் காலத்தில் இந்த நல்லுசாமி எல்லாம் சமீபத்தில் கூட வரக்கூடாதே!

பரிமேலழகர் : நாட்டாண்மைக்காரரையா! அரசியலில் இலஞ்சம் வாங்காமல் நேர்மையாய் உழைக்கும் அதிகாரியர்

இருந்தால்தானுங்க நிறுவாகம் யந்திரம் நன்றாய் ஓடும்; நம்முடைய காங்கிரசு கட்சி ஆங்கிலேயரை ஒழித்து சுய இராசியம் வாங்கினதெல்லாம் ஒரு வெற்றி இல்லிங்க; கையூட்டு வாங்குகிறதையே குறிக்கோளாகக் கொண்ட தன்னலம் பிடித்த அயோக்கிய அதிகாரிகளை ஒழித்துக் கட்டினால் தானுங்க அதற்குச் சிறந்த வெற்றி.

நாட்டாண்மை : நல்லா சொன்னிங்க ஆசிரியரையா? இனிசுபெக்டர் இலஞ்சம் கேட்ட விசயமாய் மேலதிகாரிகளுக்கு எழுதுங்களேன்.

பரிமேலழகர் : அதற்குச் சாட்சி வேண்டாமா?

சேனாவரையர் : சாட்சியிருந்தாலும் மேலதிகாரியர் கவனித்தால்தானே! ஆசிரியர்களைக் கண்டால் எந்த அதிகாரியும் அலட்சியமாய்த்தானே எண்ணுகின்றனர். நம்முடைய குறை எப்படி அவர்கள் காதுக்கு எட்டும்? கடைசியில் வந்ததை அனுபவிக்க வேண்டுவதுதான்.

நாட்டாண்மை : ஆசிரியரையா! இதற்கு நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம்; இனிசுபெக்டர் கோபத்தால் கிராண்டுதானே கிடைக்காது. போனால் போகிறது; பிச்சைக்காரக் கிராண்டு, உங்களுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் நான்

செய்து தருகின்றேன். நீங்கள் உற்சாகமாய்ப் பள்ளிக்கூடத்தை நடத்துங்கள்.

பரிமேலழகர் : உங்கள் ஆதரவினால்தான் பள்ளிக்கூடம் நன்றாய் நடக்கிறது. ஆனால். இந்த அதிகாரிகளின் நடத்தை தான் எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. (மாணவனைக் கூப்பிடுகின்றார்) தம்பீ ஞானசம்பந்தம்!

ஞானசம்பந்தன் : என்னங்க ஐயா!

பரிமேலழகர் : நீ அந்த கவர்ன்மெண்டார் என்கின்ற பாட்டை நம்ம ஐயாவிடத்தில் சொல்.

ஞானசம்பந்தன் :

கவர்ன்மெண்டார் கொடுக்கின்ற கணக்கற்ற
பணம்பெற்றும் கவலை யுற்றே
எவர்மிண்டா யினும்அடைக எமக்குநீ
பணங்கொடுப்பாய் என்று வாங்கும்
தவறுண்ட அதிகாரி தங்களையே
நீபடைத்துத் தயக்கம் இன்றிக்
கவர்இண்டும் கோநாயும் கள்வரையும்
படைத்த தென்ன கயிலை வாசா.

(திரை)

....

உறுப்பு - 5

இடம்	:	இனிசுபெக்டர் வீடு.
காலம்	:	காலை மணி 8.
உரியவர்	:	நல்லசாமி ஆசிரியரும், டிப்டி இனிசுபெக்டரும், அவருடைய தவழுங் குழந்தையும், மனைவிகமலமும், மகள் சந்திரா, குழந்தை.

(ஆசிரியர் நல்லசாமி ஒரு பெருத்த மூட்டையுடன் இனிசுபெக்டர் வீட்டில் நுழைகிறார். இனிஸ்பெக்டர் கூடத்தில் மேசைக்குமுன் நாற்காலியில் உட்கார்ந்து எழுதிக் கொண்டுள்ளார்.)

ஆ. நல்லசாமி : (மூட்டையை இறக்கிக் கீழே வைத்துவிட்டு) சாமி சாமீ! நமசுகாரம்.

இனிசு : வாய்யா! வாய்யா!! ரொம்ப சந்தோசம்.

(ஆசிரியர் கீழே விழுந்து நமசுக்காரம் செய்கிறார்; பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்த இனிசுபெக்டர் வீட்டுக் குழந்தை பரபரவென்று ஏறி ஆசிரியர் மேல் உட்கார்ந்து சிண்டைக் கையில் பிடித்துக் கொண்டு குதிரை சவாரி செய்கிறது).

ஆ.நல்லசாமி : அடா டா அடாடா! என்ன தம்பீ நானு ஒனக்குக் குருதையா?

இனிசுபெக்டர் : ஓகோகோ! போக்கிரிப்பயலே! என்னடா வாத்தியாரு சிண்டைப் பிடிச்சுக்கிட்டே! ஏ கமலம்! (மனைவி) ஓடிவா சீக்கிரம்.

கமலம் : இதோ வந்துட்டேன்! என்னாங்க? என்னாங்க?

இனிசுபெக்டர் : உன் குழந்தை பண்றத்தைப் பாரு. வாத்தியார் மேலே ஏறிக் குதிரை சவாரி பண்றது.

கமலம் : அடெ போக்கிரிப்பயலே! வாடா இப்படி, அந்த பியூன் வீட்டுப் பையன்மேல் ஏறி குதிரை சவாரி பண்றான் அல்லவா? அதை இப்ப நினைச்சுக்கிட்டான்.

(கமலம் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்.)

இனிசுபெக்டர் : உட்காரையா வாத்தியாரே! சௌக்கியமா?

ஆ.நல்லசாமி : என்னமோ எசமாங் கடாச்சத்தினாலே எல்லாம் சௌக்யந்தானுங்க.

(கொண்டுவந்த மூட்டையை அவிழ்த்து அதிலுள்ள பொருள்களையெல்லாம் எடுத்துக் கொடுக்கிறார்)

இனிசுபெக்டர் : என்ன வாத்தியாரே! சில டானா டாவன்னால்லாம் சேர்ந்துகொண்டு நான் கையூட்டு வாங்குகிறேனென்றும், அதற்கு நீயும் இன்னுஞ் சிலரும் உடந்தையாயிருக்கிறீர்களென்றும் மேலாவுக்கு எழுதியிருக்கான் களாமே முட்டாள்கள்!

ஆ. நல்லசாமி : நாங்கூட அப்படித்தாங் கேவிப் பட்டேனுங்க மலேலே வெளைஞ் சாலும் ஒரள்ளே வந்துதானே யாகணுங்க ; எங்கே எளுதுனாலும் எளுதட்டும் கடசீலே எசமாங்கிட்ட அந்த முட்டாளுவ வந்துதான போகனுங்க.

இனிசுபெக்டர் : வாத்தியாரே! சோழபுரம் கிறுக்கு

வாத்திப் பள்ளிக்கூடத்தை ஒழிச்சுக் கட்டுவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடும் செய்தாயிற்று.

ஆ.நல்லசாமி : அப்படிங்களா? ரொம்ப சந்தோசம் அந்த முட்டாளுவளுக்கு அப்படித்தான் வேணுங்க.

இனிசுபெக்டர் : கமலம்! வாத்தியாருக்கு டிபன் கொடு நான் ஆபீஸ் வரையில் போய் வருகிறேன்.

(இனிசுபெக்டர் போகிறார் வாத்தியார் சிற்றுண்டி உண்டு விட்டு உட்கார்ந்திருக்கிறார்).

கமலம் : என்ன வாத்தியாரே! சில வாத்திய ரெல்லாம் சேர்ந்துக் கொண்டு நம்ம ஐயா கையூட்டு வாங்குகிறாரென்று மேலாவுக்கு எழுதியிருக்கான்களாமே.

ஆ. நல்லசாமி : ஒங்கத் தொடப்பக்கட்டை என்னா பண்ணிவிடுவானுவங்க?

கமலம் : என்னா பண்ணக்கெடக்குது? இப்போதிருக்கிற எஜுகேஷன் ஆபீசரா கட்டும்; இன்னும் மேலதிகாரி களாகட்டும் ஜில்லா போர்டு பிரசிடெண்டாகட்டும் எல்லாரும் ஐயா மேலே வெகு பிரியம்; அதுவுமில்லாமல், அவர்களும் நூறு நூறா இலஞ்சம் வாங்கிக் கொண்டுதானேயிருக்கிறாங்க அவங்க என்ன செய்துவிடுவார் களென்று இந்த முண்டாங்களுக்குத் தெரியவில்லையே வாத்தியாரே!

ஆ.நல்லசாமி : நாங்கூட இந்த செருப்பு வெளக்க மாத்தேல்லாம் காதுலே போட்டுக்கக் கூடாதுண்ணு பேசாதே இருந்தூட்டேனுங்க ; இல்லாவிட்டா எளுதுன முண்டைகள் ஊட்டெ, பள்ளிக்கூடத்தெல்லாம் நெருப்பு வைச்சிப் பொசுக்கிப்புடமாட்டேனுங்க!

கமலம் : என்ன பாரு! இந்த முண்டை களெல்லாம் ஐயாக்கிட்ட வரப்போக, ஏதோ ஐயாக்கேட்டால் என்னமோ என்னாலே இதுதான் முடிஞ்சுதுண்ணு கொடுத்துப் பிரியமாயிருந்தால் ஐயாருக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கும்?

ஆ.நல்லசாமி : என்னமோ! நல்லெளுத்து நடுவேயிருக்கக் கோணெளுத்துக் குறுக்கே போச்சுங்களாம் அப்படியிருக்குது அந்த முண்டைகளுக்கு.

கமலம் : அது கெடக்குது வாத்தியாரே! இந்த வாத்தியார்களாலே ஐயாரை என்னா பண்ண முடியும்? நம்ம சந்திரா (மகள்) வுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்குது வாத்தியாரே!

ஆ.நல்லசாமி : அப்புடிங்களா? ரொம்ப சந்தோசம்!

கமலம் : நம்ம சந்திரா, செயின் வேணும் வேணு மென்று சும்மா நச்சுப் பண்ணிக்கிட்டிருக்கா ; அதை இந்தக்

கல்யாணத்திலியாவது செய்து பொட்டுடுணும் என்று நினைச்சுக் கிட்டிருக்கேன் . ஒரு வாத்தியா ரொண்ணுக்கு ஒரு பவுன் அல்லது அரைப்பவுன் வீதம் சேர்த்தால் ஒரு முப்பது பவுனில் செய்துவிடக்கூடாது வாத்தியாரே !

ஆ. நல்லசாமி : இது என்ன பிரமாதங்க ! எல்லாம் ஐயா தயவு இருந்துட்டா எங்களுக்கு என்னா கொறைச்சலுங்க ?

சந்திரா (மகள்) : வாத்தியாரே ! ஒங்க ஊருலே பாவாடைத்துணி நெய்யுதாமே, நல்ல மெல்லீசா சாயமாயிருக்குமா?

ஆ. நல்லசாமி : நாம சொல்லி நேஸ்ஸா நல்லலாருக்கும் அம்மா? ஐயா விசுட்டுக்கு வர்றப்ப குடுத்தனுப்புட்டுமா?

கமலம் : என்ன சந்திரா ! கண்டத்தேல்லாங் கேட்டு வாத்தியாரைத் தொந்தரவு பண்றியா? அது கெடக்குது வாத்தியாரே ! நான் சொன்னத்தைக் கொஞ்சம் முயற்சி செய்து பாரு .

ஆ.நல்லசாமி : நல்ல காலமாயிருந்தா நானே செஞ்சு போட்டூடுவனுங்க, காலந்தாங் கொஞ்சம் மோசமாயிருக்குதுங்க ; எங்கூருக்கு அரை மயில்லே பொடை யூருண்ணூ ஒரு ஊரு இருக்குதுங்க; அந்தூருலே ரெண்டு பசங்களெ சேத்து நாலு வாத்தியாரைப்போட்டு ஒரு

பள்ளிக்கூடம் வைச்சிருக்றனுங்க . ஐயா தயவிருந்தா நானே அஞ்சு பவுன் கொடுப்பேனுங்க .

கமலம் : அப்படியா ! ஐயாக்கிட்டெ ஆகிற காரியத்தை எல்லாம் எங்கிட்டே சொல்லு வாத்தியாரே ! ஐயாருக்குப் பல தொந்தரவு; மறந்தாலும் மறந்துடுவாங்க ; நான் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கண்டிப்பாச் செய்யச் சொல்றேன்.

ஆ. நல்லசாமி : நீங்க சொன்னபடி சீக்கிரத்திலே பவுன் வசூல் பண்ணிவிட்றேணுங்க அம்மா ; கடைவீதிவரேலே போயிட்டு வர்றணுங்க அம்மா!

(போகிறார்)

(திரை)

உறுப்பு – 6

இடம் : கொசுப்பட்டி ஊர்ச்சாவடி .

காலம் : முற்பகல் மணி 10 .

உரியவர் : நல்லசாமி ஆசிரியர், சின்னு, வைத்தி, பொன்னன், அஞ்சல்காரர்

சின்னு : வாத்தியாரே ! எனக்கொரு ஒதவி பண்ணுனா தேவலாமே .

ஆ. நல்லசாமி : என்னடா சின்னு ஒதவிபண்ணுணும்?

சின்னு : பக்கத்தூருலே புண்ணாக்கு வெலை பேசிப் புட்டு வந்துருக்கேன்; ஓங்க வண்டியை ஒரு நாளைக்கு வாடவைக்கும் குடுக்குணும். அப்புறம் ஒரு அம்பது ரூவா கைமாத்தாக் குடுத்தாத் தேவலாம்.

ஆ. நல்லசாமி : வண்டி கல் ஏத்திக்கிட்டுச் செதம்பரம் போயிருக்குது, பணங் கொடுக்றத்துக்கு செக்கு வல்லே வேறெ எங்கியவது பாத்துக்கடா சின்னு .

சின்னு : வண்டி என்னாத்துக்குச் செதம்பரம் போயிருக்குது வாத்தியாரே!

ஆ. நல்லசாமி : எங்க பள்ளிக்கூடத்து இனிசுபட்டரு மவளும் மருமவனும் செதம்பரத்துலே ரெண்டுக்கு யிருக்காங்கலாம்; அதனாலே இனிசுபட்டர் ஐயா அவுங்களுக்கு ஊடு கட்றாங்களாம்; அதுக்குத்தானப்பா வண்டி கல் ஏத்திக்கிட்டுப் போயிருக்குது.

வைத்தி : ஐயோ! ஐயோ!! இனிசுபட்டரு மவளும் மருமவனும் இங்கெல்லாம் ரெண்டுக்கு (மலஜலம்) இருக்கக் கூடாதா? பூலோக கயிலாசமெங்கிற செதம்பரத்துலேதான் போயி ரெண்டுக்கிருக்கணுமா? அதுக்கு ஊடு வேறே கட்டுணுமா?

(எல்லாரும் நகைக்கின்றனர்)

பொன்னன் : வாத்தியாரே! அப்படீன்னா நீ செக்கு தருவிக்கிறியா? நானு நெறையா மல்லாக்கொட்டை புடிச்சுப் போட்டிருக்கேன்; நீ செக்காடிக் குடுத்தூட்றியா?

ஆ.நல்லசாமி : (சிரித்துக் கொண்டு) வயித்தீ! ரெண்டுக்குண்ணா நாம கொல்லைக்குப் போறமே (மலசலம்) அதுயில்லப்பா! இங்கீலீசுபாசேலே ரெண்டுக்கிண்ணா வாடவைக்குண்ணு அருத்தம். செக்குண்ணா மல்லாக்கொட்டை ஆடுற செக்கில்லே ; எங்கப் பள்ளிக்கூடத்துக்குச் சருக்காரு பணங்கொடுக்கிறாங்கள்ளே, அந்தப் பணம் எளுதி வர்ற கடுதாசிக்குச் செக்குண்ணு பேரு.

வைத்தி : என்னடா ஆளே! இங்லீசு பாசேலே இப்புடிப் பேரு வச்சிருக்காங்க? அப்புடீண்ணா சருக்காருலே செருப்பு வெளக்குமாறுண்ணு கூட கடுதாசிக்குப் பேருவப்பாங்களா வாத்தியாரே!

ஆ.நல்லசாமி : என்னமோ? யிருந்தாலும் இருக்கும்டா வயித்தீ! நாம கடேலே சாமான் வாங்குனா வெலை எளுதிக் குடுக்ற கடுதாசிக்குப் பில்லுண்ணு பேரு வச்சிருக்காங்களே!

சின்னு : அப்படீன்னா சருக்காருலே பருத்திக் கொட்டைப் புண்ணாக்குண்ணு எதுக்காவது பேரு வச்சிருக்காங்களா வாத்தியாரே!

ஆ.நல்லசாமி : அதென்னமோ தெரியிலேடா சின்னு! (தூரத்தில் வருகிறவனைப் பார்த்து) அங்கே வர்றவன் டபால் காரனாட்டம் இருக்குதே!

பொன்னன் : ஆமாம் வாத்தியாரே! ஆமாம் வாத்தியாரே!!

(சமீபத்தில் அஞ்சற்காரார் வருகின்றார்).

ஆ.நல்லசாமி : வாய்யா டபால்காரரே! எனக்கு ஏதாவது டபால் வந்திருக்கா?

தபாற்காரர் : இதோ பாருங்க ஒரு தபால்!

(அஞ்சல் மடலை வாங்கி ஆசிரியர் படிக்கிறார்)

ஆ.நல்லசாமி : நான் செக்கு வந்திருக்கும்ணு ஆசையாயிருந்தேன், செக்கு வல்லேடா சின்னு.

சின்னு : பின்னே, என்னாக் கடுதாசி வந்திருக்குது வாத்தியாரே!

நல்ல : அதையேங் கேக்கிறே! எங்க பள்ளிக்கூடத்துச் செக்கு வாங்றத்துக்கு *சில்லா எசுகேசன் கவுன்சில் பெரசிண்டுக் கிட்டே வரச்சொல்லிக் கடுதாசி வந்துருக்குது.

வைத்தி : அப்படிண்ணா வாத்தியாருக்கு ஒரு பயணமிருக்குது.!

(எல்லாரும் போகின்றனர்.)

(திரை)

---

*இந்நாடகம் எழுதிய பொழுது மாவட்டக் கல்வி வழிகாட்டல் குழுத் தலைவரே ஆசிரியர்க்குக் கிராண்டு கொடுத்து வந்தனர்.

உறுப்பு – 7

இடம் : மாவட்டத் தலைநகர்.

காலம் : காலை ஏழு மணியிலிருந்து மாலை 5 மணிவரை.

உரியவர் : தொடக்கப்பள்ளியாசிரியர், சின்னசாமி, சரவணன், சோலை, பழனி, மணி, ஓட்டல் கைலாசம், பேருந்து நடத்துநர், ஆ.நல்லசாமி, பியூன், தலைமை எழுத்தர், சில்லா எசுகேசன் கௌன்சில் ஆபீசு கிளார்க்கும்.

(ஊரிலிருந்து வரும் ஆசிரியர் சாலையில் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசிக்கொண்டு வருகின்றனர்)

சின்னசாமி : வாங்க! வாங்க!! வாங்க!!! எல்லா ஆசிரியரும் வரணும்; எல்லாரையும் ஒரு கூட்டமாகப் பார்க்கிறது எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது?

சரவணன் : வாங்க வாங்கக் கடன்தான்; நம்மை எல்லாம் ஒன்றாய்க்கூடச் செய்த எசுகேசன் கௌன்சில் பிரசிடெண்டவர்களை இந்த வகையில் வாழ்த்தவேண்டியது தான்.

சோமு : வாத்தியார்களுக்குக் கடனில்லாதெ முதல் வேறெயிருக்குதா?

இராமு : ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி; அவனுக் கிளைத்தவன் பள்ளிக்கூடத்து வாத்தி என்கிற பழமொழி நம்முடைய பொருளாதார ஏழ்மையைத் தானே காட்டுகிறது.

பாலு : ஒழுங்காய் நடந்தால் பணம் சம்பாதிக்க முடியாது; ஒழுங்கீனமாய் நடந்தாற்றான் பணம் சம்பாதிக்கலாம். ஆனால், பள்ளியாசிரியர்களுக்கு ஒழுங்கீனமாய் நடக்க இடமேது? அதனாலேதான் பணம் சேருவதில்லை.

இராசு : ஆசிரியர்களுக்கு ஒழுங்கீனமாய் நடக்கயிடமாயில்லை? நம்மைப் போன்றவர்களுக்கு ஒழுங்கீனமாய் நடக்கத் தெரியாது; கொசுப்பட்டி யாசிரியரைப் பாருங்கள்! சோதிடம் சொல்வார்; வயித்தியம் செய்வார்; மாந்திரீகம் பண்ணுவார்; நிலம் உழுவார்; கொடுக்கல் வாங்கல் செய்வார்; பள்ளிக்கூடத்தில் உட்கார்ந்து அரிநானாவென்றுகூடச் சொல்லிக் கொடுக்கமாட்டார்; ஆனால் அதிகாரிகளைக் காக்காப்பிடித்து நமக்குமேலே கிராண்டு வாங்கிவிடுவார்.

மணி : ஒழுங்காய் நடக்கிறவர்களுக்கு இது காலமில்லிங்களே!

சோலை : பேசிக்கொண்டு போகிற சோருலே கட்டுச் சோற்றை மறந்துவிடாதீர்கள் நண்பர்களே! இதோ குளமிருக்கிறது ஆனந்தமாய் உட்கார்ந்து சாப்பிட்டு விடலாம்.

பழனி : நம்ம சோலை காரியத்தின்மேலேயே கண்ணாயிருக்கிறார் அவர் சொல்வது ஞாயந்தான்; வாங்க எல்லாரும் சாப்பிட்டுவிடுவோம்.

(குளக்கரையில் சாப்பிட்டுவிட்டுச் சில்லா தலைநகருள் நுழைந்து சில்லா எசுகேசன் கௌன்சீல் ஆபீசை நோக்கிச் செல்கின்றனர்.)

மளிகைக்கடைக்காரர் : கூட்டமா வர்றவங்களே! எங்கே திருப்பதிக்குப் புறப்பட்டிங்களா? எங்கக் கடையில் உங்களுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் ரொம்ப சரசமாகக் கொடுகிக்கிறோம். எல்லாச் சாமான்களையும் எங்கக் கடையிலே வாங்கிக் கொள்ளுங்கள்.

சரவணன் : ஐயா! இராமபாணம் பாஞ்ச (உளுவடித்த) சரக்குகளாத் தயார் பண்ணி திருப்பதிக்குப் போறவாளுக்குக் கொடுத்து ராமம்போட்டு (ஏமாற்றி) அனுப்பப் போறீரா? எல்லாச் சாமானும் கிடைக்கும் என்கிறீரே! நேற்றடிச்சக் காற்று முந்தாநாள் அடித்த வெயில் இவைகளெல்லாம் கிடைக்குமா உம்மக் கடையிலே?

(எல்லாரும் சிரித்துக் கொண்டு செல்கின்றனர்)

ஓட்டல் கைலாசம் : எல்லாரும் வரணும் வரணும் ; எங்கள் கிளப்பில் வேண்டிய காப்பி, டீ, கோக்கோ, சுண்டல், முறுக்கு, மசால்வடை எல்லாம் இருக்குது; எல்லாரும் இப்படி எழுந்தருளுணும்.

சரவணன் : ஓட்டல்காரரே! உங்கள் மசால்வடையில் எத்தனை நூல்போட்டுத் தைத்திருப்பீர்! சப்பான் ஊசியால் தைத்தீரா? செர்மன் ஊசியால் தைத்தீரா?

(எல்லாரும் சிரிப்பு)

பேருந்து நடத்துனர்: வாங்க சாமீ! வாங்க! எங்கே பட்டணம் போவணுமா? புதுச்சேரி போவணுமா? செதம்பரம் போவணுமா? சேலம் போவணுமா? எல்லா பஸ்சும் ரெடியாயிருக்குது.

சரவணன் : நடத்துனரே! எங்களுக்கு அங்கே போகிறதற்கெல்லாம் கையில் காசேது? நாங்கள் தினப்பட்டினி கிடக்கிறமே ; சிவலோகம் பிரம்மலோகம், வைகுண்ட லோகம், இந்திரலோகம், சந்திரலோகம், போவதற்கு உங்கள் செட்டில் பஸ்ஸிருக்கிறதா?

(எல்லாரும் சிரிப்பு)

பாலு : இதுதான் நமது பிரசிடெண்ட் பங்களா; இங்கேதான் ஆபீசும் இருக்கிறது.

சோமு : அப்படியா? எல்லோரும் வாருங்கள்! அந்த அழகான மரத்தடியில் உட்காருவோம்; யாராவது சிலர் மட்டும் முன்சென்று எத்தனை மணிக்குப் பில் கொடுப்பார்களென்று தெரிந்து வரட்டும்.

பாலு : ஆசிரியத் தோழர்களே! இப்படி உட்காருங்கள். நான்போய் செய்தி தெரிந்து வருகின்றேன். (போகிறார் போஸ்ட் அலுவலகப் பலகைகளை பார்த்துவிட்டு உள் நுழைகிறார்.)

பியூன் : யாரையா அது உள்ளே நொளையறது? தெறந்த ஊட்டுலே நாய் நொளையற மாதிரி!

பாலு : நல்ல உவமானம் சொன்னேயப்பா! மனுசனை வெகு சீக்கிரத்தில் நாயாக்கி விட்டியே! நீ பெரிய பிரம்மாவாட்டம் இருக்கே!

பியூன் : பிரமாவாவது தோசை மாவாவது! நான் இங்கே ஒக்காந்திருக்கும்போது எப்படிய்யா கேக்காதே உள்ள நொளைஞ்சே?

பாலு : என்னமோ தெரியாதே செய்துவிட்டேன் அப்பா! இப்பொழுதுதான் உள்ளே போகிறதற்கு உத்தரவு கொடேன்.

பியூன் : சரிதான்; போயிட்டு ஒருமணிக்கு வாய்யா! அதுமுட்டும் தலைகீளே நிண்ணாக்கூட முடியாது.

(பாலு போய் எல்லா ஆசிரியர்களிடமும் சொல்லிக் கொண்டிருக்கிறார். கொசுப்பட்டி ஆசிரியர் இப்பொழுதுதான் வருகிறார்)

பாலு : வாங்க! வாங்க!! வாத்தியாரே! உங்கள் வருகையை நாங்களெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆ. நல்லசாமி : ரொம்ப சந்தோசம்; நமக்கெல்லாம் எப்ப பில்லு குடுக்றாங்க?

சரவணன் : பாலு ஆபீசுக்குப் போனார்? அவரை அங்கிருக்கிற பியூன் நாயாக்கிவிட்டான் வாத்தியாரே! நீங்கள் போய் பில்லுக்கேட்டால் உங்களை எருமையாக்கிவிடுவான். அந்த பியூன்.

(எல்லாரும் நகைக்கின்றனர்)

ஆ. நல்லசாமி : எந்த ஆபீசுலியும் வெறுங்கையாப் போனா அங்கேயிருக்றவங்க நம்மை மதிக்கமாட்டேங்குறாங்க; அதுக்குத்தான் ஏதாவது சொரணை புட்பம் கொண்டு போயி சமர்ப்பயாமி பண்ணவேண்டி யிருக்குதுங்க.

பாலு : வாத்தியாரே! நான் கட்டுச்சோறுதான் கட்டிக் கொண்டு வந்திருக்கிறேன்; சொரணையாவது புட்பமாவது என்னிடத்தில் இல்லை. சொரணை யிருந்தால் நான் ஏன் வாத்தியார் உத்தியோகத்திலிருக்கிறேன்.

ஆ. நல்லசாமி : கையூட்டு கொடுத்தால் தானுங்க எந்தக் காரியமும் பஞ்சமில்லாமல் நடக்குங்க;

இல்லாவிட்டால் வஞ்சந்தானுங்க ; வாத்தியார் ஒவ்வொருத்தரும் பிய்யூனுக்கு நாலணாவும், கௌார்க்குக்கு இரண்டு உரூவாயும் கொடுத்தாத்தான் பில்லு கொடுப்பம்னு எங்கிட்டே சொல்லி வச்சிருக்காங்க ; இட்டமாருக்கிறவங்க குடுங்க ; சீக்கிரம் பில்லு வாங்கிக்கிட்டுப் போவலாம்.

சரவணன் : ஐயோ! ஐயோ!! ஒம்பதிக்கால் இரண்டே கால் ரூபாயா? தோல் கேட்டுலே யிருக்கிறவர்களுக்கு ஒன்பது வண்டிப் பணமாச்சே யிது! அடெ நவக்கிரகமே!

(சிரிப்பு)

ஆ.நல்லசாமி : பணமிருக்றவங்க ஏம்பின்னாலே வாங்க!

(ஆசிரியர் அலுவலகத்தை நோக்கிப் போகிறார். பல ஆசிரியரும் கூடச் செல்கின்றனர்.)

பியூன் : வாங்க வாத்தியாரே! தண்டம்! தண்டம்!! ஏன் இம்புட்டு நேரம்?

ஆ.நல்லசாமி : நேரந்தான் ஆயிட்டுது; இங்கே வந்திருக்கிறவங்கள்ளாம் நவ்வாலணா குடுப்பாங்க வாங்கிக்கப்பா!

(எல்லாரும் கொடுக்கின்றனர், பின்னர் அலுவலகத்திற்குள் செல்கின்றனர்)

ஆ. நல்லசாமி : (தலைமை எழுத்தரைப் பார்த்து) சாமி! சாமீ!! கும்புட்றேன்.

தலைமை எழுத்தர்: என்ன வாத்தியாரே எல்லாரையும் ஏன் கூட்டமா அழைச்சாந்துட்டே?

ஆ. நல்லசாமி : இவுங்கல்லாம் நம்மளவங்க ; ஏதோ சாமியைப் பார்த்துவிட்டுப் போவலாம்னு வந்திருக்காங்க (ஆசிரியர்கள் பக்கந் திரும்பி) நான் சொன்னத்தைக் குடுங்க வாத்தியார்களே! (எல்லாரும் இரண்டிரண்டு உரூபாய் கொடுக்கின்றனர்)

தலைமை எழுத்தர்: ஆசிரியரே! இன்னம் பில்லில் பிரசிடெண்ட் கையெழுத்தாகலே.

ஆ. நல்லசாமி : ஐயோ வாத்தியார்கள் எல்லாம் வெகு தூரத்திலேருந்து கட்டப்பட்டு வந்துருக்காங்களே? எப்புடியாவது ஒதவி பண்ணுணுங்க சாமீ!

தலைமை எழுத்தர்: இந்த வருஷம் கவர்ன்மெண்டுலே பணம் குறைவாகக் கொடுத்திருக்காங்க; அதனாலே ஒவ்வொரு வாத்தியாருக்கும் முழு கிராண்டு கொடுக்க முடியாது. பாவம்! வாத்தியார்கள் கட்டப்படுவாங்களே என்று நம் பிரசிடெண்ட் அவர்கள் கவர்ன்மெண்டாரை முழுப் பணம் கொடுக்குபம்படி வாதாடிக் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆகையால், ஒரு வெற்றுக் கடுதாசியில் இந்த பில்லில் கண்ட தொகையைப் பெற்றுக்

கொண்டோம் என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுவிட்டு இப்பொழுது கொடுக்குந் தொகையைப் பெற்றுக் கொண்டு போங்கள்; என்னமோ கவர்ன்மெண்டிலேயிருந்து இன்னம் பணம் வந்தால் உங்களுக்கு முழுவதையும் அனுப்பிவைக்கிறோம்.

ஆ, நல்லசாமி : அப்புறம் என்னா பண்றதுங்க? நீங்கள் சொன்னபடி நாங்க கேக்குறம்: கடுதாசி குடுங்க ; நீங்க சொன்னபடி கையெழுத்துப் போட்டுக் குடுக்குறம்.

(பல ஆசிரியர் கடிதத்தில் கையெழுத்திடுகின்றனர். பிரசிடெண்டு விரும்பிய பணம் எடுத்துக் கொள்ளப்பட்டு குறைவான பணம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆசிரியர் வெளியே வருகின்றனர்)

பாலு : (பணம் வாங்கிக் கொண்டு வருபவரைப் பார்த்து) காயா? பழமா? நண்பர்களே!

சோமு : பழமும் உண்டு; காயும் உண்டு;

பாலு : அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?

சோமு : இந்த வருசம் கவர்ன்மெண்டார் முழுப் பணம் கொடுக்கவில்லையாம். அதனாலே நமக்கெல்லாம் அரைக்கிராண்டுதானாம் ; நம்ம பிரசிடெண்டு கவர்ன்மெண்டாரோடே முழுப்பணம் கொடுக்க வேண்டுமென்று வாதாடிக் கொண்டிருக்கிறாராம்; ஆகையினாலே

இந்தச் செக்கிற்கண்ட தொகையைப் பெற்றுக் கொண்டோமென்று கையெழுத்துப் போட்டுவிட்டு வந்ததைப் பற்றடா வடக்குக் காட்டுச் சித்தா; கிடைத்ததைப் பற்றடா கீழைக்காட்டு சித்தா என்றபடி கொடுத்ததை வாங்கிக் கொண்டு வந்துவிட்டோம்.

பாலு : ஆ! ஆ!! அப்படியா? மோசம்போய் விட்டீர்களே! எதற்காக அப்படி வாங்கினீர்கள்? திருட்டுப் பிரசிடெண்டு உங்களை ஏமாற்றிவிட்டானே! காருண்யமுள்ள கவர்ன்மெண்டாரவர்கள் முழுப்பணமும் கொடுத்துவிட்டார்! இந்தப் படுபாவியா நம்மை ஏமாற்ற இப்படி வேஷம் போடுகிறார் ; கிராண்ட் வாங்காத ஆசிரியர்களே! நீங்கள் ஒருவரும் இவர்களைப் போல் வாங்கவேண்டாம்; அவரவர்களும் ஊருக்குத் திரும்புங்கள்; நம் கிராண்ட்டு நம்மைத் தேடிவரும் ; நான் சொல்லுவதில் கொஞ்சமும் ஐயப்படவேண்டாம்.

(எல்லாரும் ஊருக்குத் திரும்புகின்றனர். அவர் நடுவில் நம் சரவணன் கீழ்வரும் பாட்டைப் பாடுகின்றனர்)

சரவணன் :

காப்பி இட்டலி உண்டு வீட்டுக்

காரு மேலே ஏறிக் கிட்டு

ஊரை ஏய்த்துப் பணப்பி டுங்க

உத்தியோகம் பார்க்கின் றவரே!

எங்களாட்டம்

கட்டு சோறு தின்னுப் பார்க்கணும்

கட்டை வண்டி ஏறிப் பார்க்கணும்

இராத் தூக்கம் விழிச்சுப் பார்க்கணும்

நாலரைக் காதம் நடந்து பார்க்கணும்

தன்னானே தன்ன தன்னானே.

(திரை)

உறுப்பு – 8

இடம் : சில்லா போர்டு பிரசிடெண்டு பங்களா.

காலம் : காலை மணி பத்து

உரியவர் : சில்லா போர்டு பிரசிடெண்டு, தாமோதரம் பியூன், தலைமை எழுத்தர் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியரொருவர்

பிரசிடெண்டு : (வருகின்றவரைப் பார்த்து) வாங்க வாங்க தாமோதரம் எங்கே வெகு நாளாச்சே உங்களைப் பார்த்து! வீட்டில் எல்லாரும் சௌக்கியமா? எலக்சனுக்குப் பிறகு இந்தப் பக்கமே வரலியே!

தாமேதரம் : வர்ரேனுங்கையா! கும்பிட்றேன். என் குடும்பத்தின் நான் ஒருத்தன்; எந்த வேலையும் நான்தான் கவனிக்கவேண்டியிருக்குது! எங்கே வெளியே வரமுடியுதுங்க!

பிரசிடெண்டு : உங்கள் ஊர் போர்டுபெண் பாடசாலை நல்லா நடக்கிறதா? சமீபத்தில் செல்வி என்கிற வாத்திச்சியை உங்கள் ஊருக்கு மாற்றிப் போட்டேன். நல்லா வேலை செய்கிறாளா? அவள் நடத்தை எப்படி?

தாமோதரம் : என்னமோ நல்லா வேலை செய்கிறதாக ஊராரெல்லாம் சொல்லுகிறாங்க; எனக்கென்னமோ அவள் செய்கிற வேலை எல்லாம் கொஞ்சங்கூடப் பிடிக்கிலிங்க; நடத்தை என்னமோ வெளிக்கு அருந்ததி மாதிரி

		காட்டிக் கிறாளுங்க; ஆனால், உள்ளுக்குள்ளே களவாணித்தனம் இருக்கணும் என்று நினைக்கிறேனுங்க .
பிரசிடெண்டு	:	என்ன ! என்ன !! உங்களுக்குப் பிடிக்காதெ எதாவது நடந்து கொண்டாளா ? அப்படியானால் அதைச் சொல்லுங்கள் அதற்கு வேண்டிய பனிசுமெண்ட கொடுக்கிறேன் .
தாமோதரம்	:	ஒருநாள் தாசில்தார் நம்மூருக்கு வந்திருந்தார் ; அதற்காக நாற்காலி, மேசை வேணுமென்று கேட்டனுப்பித்தேன்; அவள் கொடுக்கமுடியாதென்று என்னென்னமோ சட்டம் பேசினாளாம்; பல பேருக்கு முன்னாலே ஏன் கேட்டோமென்று எனக்கு அவமானமாய்ப் போச்சுங்க.
பிரசிடெண்டு	;	அப்படியா சமாச்சாரம் ? பிரசிடெண்டிற்கு வேண்டியவர் தாமோதரமென்று அவளுக்குத் தெரியாதா ?
தாமோதரம்	:	தெரியாதென்னங்க? அவ்வளவு செருக்கேறிப்போச்சு! இன்னொரு சமாச்சாரம் கேட்டிங்களா? நம்மவூரிலே உருத்ராட்சம் விபூதியெல்லாம் அணிந்துக் கொண்டு சம்பந்தம் என்று ஒரு ஆசாடபூதி இருக்கிறானுங்க; அங்கே போறது வர்றது தேவார

திருவாசகம் பாடிக்கொண்டு இரண்டுபேருமா கொம்மாளம் போட்றது இப்படி இருக்காளுங்க ; அதனாலே நம்ம பையன் தங்கவேலும் அவள்பேரில் கொஞ்சம் இச்சைப்பட்டுட் டானுங்க ; பார்த்தால் மூக்கும் முழியும் வச்சிக்கிட்டு எலுமிச்சம்பழம் மாதிரி இருப்பாளுங்க; ஒரு நாள் சாயங்காலம் அவள் வீட்டண்டைபோய் அவள் கையைப் பிடித்து இழுத்துவிட்டானுங்களாம் ; உடனே, பெண்ணாயிருந்தவள் பேயாய் மாறி நம்மப் பையனை ஒரு இடி இடிச்சுக் கீழே தள்ளித் தன் செருப்பைக் கழட்டிக்கிட்டு நல்லா அடிச்சி விட்டாளுங்க . (அழுதுக்கொண்டு) பல்லுக்கூட ஒன்று உடைஞ்சுப் போச்சுங்க .

பிரசிடெண்டு : அடே ! அடே !! அவளைச் சும்மாவாவிட்டிங்க ? கோர்ட்டுலே இழுத்து விடறதுதானே ?

தாமோதரம் : கோர்ட்டுலே பிராதுகூடக் கொடுத்தேனுங்க, அந்தக் குருட்டு மாசிசுட்டிரேட் கேசைத் தள்ளி விட்டானுங்க .

பிரசிடெண்டு : ஓ ! அவ்வளவு கெட்டிக்காரியா ? மாசிசுட்டிரேட்டைத் தனியாய்ப் போய்ப் பார்த்து வசம் பண்ணியிருப்பாள் ; அவன் கேசைத் தள்ளியிருப்பான்; நான் பிரசிடெண்டாய் வந்த பிறகு பெண்

உபாத்தியாயர்களெல்லாம் என்னைப் தனித்தனியாய் வந்து பார்த்துவிட்டுப் போனாங்க. இவளும் இன்னம் சில தடிச்சிகளும் வந்து பார்க்கவேயில்லை; நானும் ஆள் கொஞ்சம் சோக்கான பேர்வழியாயிற்றே என்று வ ர ச் செ ா ல் லி க் கூ ட ச் சொல்லியனுப்பித்தேன் ; அவள் திமிரா வரமுடியாது என்று சொல்லிவிட்டாள். உடனே என்ன செய்வேன் தெரியுமா? ஆம்படையானும் பெண்டாட்டியுமா ஒரு ஊரிலே சௌக்கிய மாயிருந்தார்கள் ; அவனைத் தூக்கி நூறுமயிலுக்கு அந்தண்டை போட்டேன் ; இவளைத்தூக்கி உங்கள் ஊரில் போட்டேன்; அப்படி மாற்றியும் இன்னுந் திமிரடங்கலே ; என்னை வந்து அவள் பார்க்கவேயில்லை தாமோதரம்.

தாமோதரம் : நான்தான் அவள் மகா திமிர் பிடித்தவள் என்று சொன்னேனுங்களே !

பிரசிடெண்டு : இருக்கட்டும் ! இருக்கட்டும் !! அவள் திமிரை நன்றாய் அடக்குகிறேன்.

(பியூன் வருகிறான்)

பியூன் : நம்ம எட்கிளார்க்கு வந்திருக்காறுங்க எசமானே !

பிரசிடெண்டு : ஹெட் கிளார்க்கா ! வரச்சொல்லுடா இங்கே !

(பியூன் போகிறான், எழுத்தர் வருகிறார்.)

எழுத்தர் : குட்மாணிங் சார் !

பிரசிடெண்டு : வாய்யா! என்ன சமாச்சாரம்?

எழுத்தர் : ஆபீசு சமாச்சாரம் ஏதாவது கேட்கலாமென்று வந்தேனுங்க.

பிரசிடெண்டு : இரண்டு மாதத்திற்கு முன்பு சுக்கூருக்கு மாற்றினமே ஒரு தடிச்சியை நினைவிருக்கா.

எழுத்தர் : நல்லா நினைவிருக்குதுங்க ! இதுவரையிலே தங்களை வந்து பார்க்கவே யில்லிங்களே ! ரொம்பத் திமிர்பிடிச்சவள் !

பிரசிடெண்டு : பர்மெனென்ட் ஹேண்டை என்ன செய்ய முடியும்? என்கிற திமிர் ! அவளைப் பதினைந்து நாளைக்கு ஒரு ஊராய் மாற்றிப் போடு !

எழுத்தர் : தங்கள் உத்திரவுப்படியே செய்கிறேன். போர்டு தொடக்கப்பள்ளி ஆசிரியர்எல்லாம் தங்களுக்கு மூன்று மாதமாய் சம்பளம் கிடைக்கவில்லையென்று வருந்துகின்றார்களே !

பிரசிடெண்டு : சரி சரி ! இந்த மாதம் கொடுத்துவிடவேண்டியதுதான் ; நாம்தாம் இதுபற்றி ஏற்கனவே பிளான் செய்து வைத்திருக்கின்றோமே ! என்ன தாமேதரம்! இந்த சில்லா போர்டு

எலெக்ஷனில்எனக்கு ஐம்பதினாயிரம் உரூபாய் செலவாகியிருக்கிறது. கேவலம் ஊசல் மொச்சக்கொட்டை விற்கிறவன் கூட காசுக்குக் காசு லாபம் சம்பாதிக்கிறான். செலவழித்த ஐம்பதினாயிரத்திற்குக் குறைந்து ஐந்து இலட்மாவது சம்பாதிக்காவிட்டால் நாம் பிரசிடெண்டாகி என்ன பிரயோசனம் ?

தாமோதரன் ; அது சரிதானுங்க, இந்த வுலகத்தில் பண மில்லாதவர் பிணந்தான்களே ! ஞாயமான வழியிலே நடந்தால் சீக்கிரம் பணம் தேடமுடியாதுங்களே ! ஆகையால், நமக்கு அதிகாரம் இருக்கும்பொழுதே எந்தெந்த வகையில் பணம் சம்பாதிக்கமுடியுமோ அந்தந்த வகையில் பணம் சம்பாதித்துவிட வேண்டுங்களே !

பிரசிடெண்டு : நல்லா சொன்னீர்கள் தாமோதரம்! போன மாதத்தில் ஒரு இலட்சத்திற்குக் காவேரிப் பாசனத்தில் நிலம் விலைக்குப்பேசிப் பத்திரம் எழுதியுள்ளேன்; மூன்று பாலங்களைக் கட்டும்படிக் குறிப்பிட்ட பேர்வழிகளுக்குக் கண்டிராக்டு விட்டேன் ; அவர்கள் மூலமாய் ஒரு எண்பதினாயிரம் உரூபாய் கிடைத்தது; இன்னம் ஒரு இருபதினாயிரம் உரூபாய் வேண்டும் .

தாமோதரம் : என்ன கடனேதும் வேண்டுமா ? நான் எங்கேயாவது தயார்செய்து கொடுக்கட்டுமா?

பிரசிடெண்டு : சேச்சே ! நான் இப்பொழுது கடனே வாங்குகிறதில்லையே ! போர்டில் இருக்கும் பணமெல்லாம் நம்ம பணந்தான் !

தாமோ : போர்டில் இருக்கிற பணத்தை எடுத்துச் செலவு செய்தால் போர்டிற்குத் திருப்பித் தரவேண்டிய தில்லையா?

பிரசிடெண்டு : அதற்கெல்லாம் வழியிருக்குது தாமேதரம் ! நான்கூட சில்லா பூராவும் உள்ள வாத்தியார் சம்பளத்தில் ஒரு மாதச் சம்பளத்தை எனக்கே எடுத்துக் கொள்ளத்தான் போகிறேன் ; திருப்பி தரப்போகிறேனா என்று பாருமே ! (தலை எழுத்தரைப் பார்த்து) ஹெட்மாஸ்டர் அசிஸ்ட்டெண்டு உள்பட எல்லா ஆசிரியர்களும் பர்னிச்சரும் சம்பளமும் வாங்கிக்கொள்வதற்காக 12-12-32-ல் போர்டு ஆபீசுக்கக் கண்டிப்பாய் வந்து சேரவேண்டியது என்று எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் சர்க்குலர் விடு; அவர்கள் நேரிலே வந்தபிறகு நமது பிளானை முடித்துக்கொவோம்.

தாமோதரம் : எலக்சன்போது இரவு பகலாகத் திரிந்து தங்களுக்கு உழைத்திருக்கிறேன் ; அடியேனையும் ஒரு கண்ணால் பார்த்துக் கொள்ளவேண்டும் .

பிரசிடெண்டு : என்ன தாமோதரம்! உம்மை நான் மறந்துவிடுவேளா ? உம்முடைய ஊரில் குடி தண்ணீர்க் கிணறு வெட்டவேண்டுமென்று விண்ணப்பம் கொடும் ; நான் சாங்சன் செய்கிறேன்; நீர் கண்டிரைக்டு எடுத்து நீரும் நல்லா இலாபமடையும் எனக்கும் ஏதாவது கொடும் .

தாமோதரம் : (தலையை யசைத்துக்கொண்டு) ரொம்ப சந்தோசம் ! என்னை எப்பொழுதும் நினைவிலே வைத்துக் காப்பாற்றவேண்டும். போய் நாளைக்கு வருகின்றேன்; அந்தச் செல்வி என்கிற வாத்திச்சியைமட்டும் ஒரு கண்ணாலே பார்த்துக் கொள்ளுங்கள் ; அவள் திமிரை அடக்கிவைக்கணும்.

(தாமோதரம் போகிறார் : பியூன் வருகிறன்)

பியூன் : எசமான் மாமா வூரிலேயிருந்து ஒரு வாத்தியாரு வந்திருக்காருங்க. எசமான் சின்னப்பிள்ளையிருக்கு போது எசமானுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்த வாத்தியாருங்களாம் அவரு .

பிரசிடெண்டு : பிரம்மகத்தி வந்திருக்கிறதா? வரச்சொல்லுடா அவனுக்கு நல்லா புத்தி கற்பிச்சு அனுப்பிச்சு வைக்கிறோன் !

(பியூன் போகிறார்; ஆசிரியர் வருகிறார்)

பிரசிடெண்டு : (சினத்துடன்) என்ன வாத்தியாரே ! எங்கெ வந்தே ?

ஆசிரியர் : (இனிமையாய்) தாங்கள் சில்லா போர்டு பிரசிடெண்டானதாகக் கேள்விப்பட்டேன் . அதனால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று; தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன் .

பிரசிடெண்டு : பார்க்கவா வந்தீர் ! நல்லாப் பாரும் (என்று சொல்லிக்கொண்டே நாற்காலி யிலிருந்து எழுந்துபோய்ஆசிரியர் முன்னிலையில் நின்று தான் போட்டிருந்த சட்டையைக் கழற்றினபின் தன் இடை வேட்டியையும் அவிழ்த்துவிட்டு தன் உடம்பைச் சுற்றிச்சுற்றிக் காட்டுகிறார் பின்) என்ன வாத்தியாரே ! என்னைப் பார்த்தாய் விட்டதா? இனி பார்க்கவேண்டியிடம் எதாவது பாக்கியிருக்கிறாதா? (ஹெட் கிளார்க்கு விழுந்து விழுந்து சிரிக்கிறார். ஆசிரியர் திருதிருவென்று விழிக்கிறார்) மரியாதையா வெளியிலே போ வாத்தியாரே !

(வாத்தியார் போகிறார்)

(ஹெட் கிளார்க்கைப் பார்த்து) இந்த வாத்தியார்களையே கிட்ட அண்டவிடக்கூடாது கொஞ்சம் நெருங்கினால் முகத்தையே நக்க வந்துவிடுவாங்க; நீர் ஆபீசுக்குப்போம். நான் சொன்னபடி இன்று எல்லா வாத்தியார்களுக்குப் சர்க்குலர் விட்டுவிடும் .

(திரை)

உறுப்பு - 9

இடம்	:	மருத்துவர் வீடு .
காலம்	:	முற்பகல் மணி 11 .
உரியவர்	:	வயதான மருத்துவர், ஆசிரியை

மருத்துவர் : வாங்க ! வாங்க ! ! வாத்தியாரம்மா ! இந்தச் சேரில் உட்காருங்கள். ஏது இவ்வளவு தூரம்? உடம்பு சரி இல்லையா ?

ஆசிரியை : (நாற்காலியில் உட்கார்தல்) ஆமாம் டாக்டர் ஐயா ! என்னை நாய் கடித்துவிட்டது : அதற்கு ஏதாவது மருத்துவம் செய்துகொண்டு போகலாமென்று தான் வந்திருக்கிறேன்.

மருத்துவர் : அப்படியா ? நாய்க் கடி மிகவும் பொல்லாத தாயிற்றே ! கடித்தது நல்ல நாயா? வெறிநாயா? எந்த விடத்தில் கடித்ததுவிட்டது வாத்தியாரம்மா?

ஆசிரியை : அதை ஏன் சொல்றிங்க? வெறிநாய் தான் கடித்துவிட்டது. (நாணிக்கொண்டு) தோளில் கடித்துவிட்டது டாக்டர் ஐயா !

மருத்துவர் : ஐயையோ ! அது அபாயகரமான இடமாயிற்றே ; என்றைக்குக் கடித்தது? காயத்தைக் காட்டுங்கள் !

ஆசிரியை : நேற்றுத்தான் கடித்துவிட்டது, டாக்டர் ஐயா! (காயத்தை மருத்துவரிடம் காண்பித்தால்)

மருத்துவர் : வாத்தியாரம்மா! தோள் மிகவும் வீங்கியிருக்கிறது; காயத்தைப் பார்த்தால் நாய்க்கடிக் காயமாகத் தெரியவில்லை; நான் வயதானக் கிழவன் ; உங்களுக்குத் தகப்பன் மாதிரி; என்னிடத்தில் உண்மையைச் சொல்லுங்கள்; உண்மையைச் சொன்னால்தான் இன்ன காயம் என்றறிந்து மருத்துவம் செய்யமுடியும்; இல்லாவிட்டால் ஒன்றுகிடக்க ஒன்று செய்து வீணாய் உங்களக்குத் துன்பம் உண்டாக்க வேண்டியிருக்கமே !

ஆசிரியை : அது நாய்க்கடியல்ல மனிதர் கடிதான்.

மருத்துவர் : ஆணா ! பெண்ணா !

ஆசிரியை : ஆண்தான் .

மருத்துவர் : இன்னம் உங்களுக்குக் கலியாணம் ஆகவில்லையே !

ஆசிரியை : நீங்கள் கிளறிக்கிளறிக் கேட்கின்றீர்கள்! எனக்கு அவமானமாகயிருக்கிறது. இருந்தாலும் உண்மையைத்தான் உங்களிடம் கூறவேண்டியிருக்கிறது. இப்பொழுதிருக்கிற, ஜில்லாபோர்டு பிரசிடெண்ட்டு ஒரு அயோக்கியன். அவன் பிரசிடெண்டாக வந்ததும் போதும், உபாத்தியாயர்கள் படும்

துன்பமும் போதும், சில்லாபோர்டே லஞ்ச மயமாகப் போயிற்று. லஞ்சங் கொடுக்காவிட்டால் அங்கு எந்தக்காரியமும் சாதித்துக் கொள்ள முடியாது. எந்தக் கேள்ஸ் டீச்சரும் அவன் வரச்சொன்னால் போய்தான் ஆகவேண்டும். போகாவிட்டால் டிஸ்மிஸோ டிரான்சரோ நடக்கும். அவன் நேற்று என்னைத் தன் பங்களாவிற்கு வரச்சென்னான் ; நான் போயிருந்தேன் . அந்த வெறி நாய்தான் என்னை இப்படிக் கடித்துவிட்டது டாக்டர் ஐயா !

மருத்துவர் : ஐயோ பாவம் ! உலகம் இப்படித்தான் அயோக்கியத் தனத்தைச் செய்கிறது . இந்த அயோக்கியப் படுபாவிகளை ஏன் என்று கேட்பாரில்லையே !

ஆசிரியை : என்ன செய்வது மருத்துவ ஐயா ! ஊழ்வினையை அனுபவிக்கத்தானே வேண்டியிருக்கிறது முன்பிருந்த பிரசிடெண்டு தங்கமானவர். நல்ல ஒழுக்கம் உடையவர். உலகம் போற்றும் உத்தமரான காந்தியடிகளின் உபதேசத்தை அப்படியே பின்பற்றி நடப்பவர். அவர் காலத்தில் எந்த உபாத்தியாயர்களும் துன்பப்பட்டதே கிடையாது. பெண் உபாத்தியாயர்களைக் கண்டால் மிக மரியாதையாகவும் அன்பாகவும்

இருப்பார். ஒவ்வொரு உபாத்தியாயர்களும் ஒழுக்கமாகவும் திறமையாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவார் ; அப்படி நடப்பவர்களுக்கு உயர்வு தருவார் : அவரை நாங்கள் தெய்வமாக மதித்து வந்தோம். ஆனால், அடுத்த தேர்தல் வந்தது . இப்பொழுதிருக்கிற பாவி பொருளை வாங்கியிறைத்துப் பொதுமக்களை ஏமாற்றிப் பிரசிடெண்டாகிவிட்டான் . ஒழுக்கமாய் நடக்கிறவர்களையும் ஒழுங்கீனமாய் நடக்கத் தூண்டுகின்றான்; ஜில்லா போர்டே மோசக் களஞ்சியமாயிருக்கிறது .

மருத்துவர் : என்ன செய்வது வாத்தியாரம்மா ! எல்லாம் பொதுமக்களுக்கு அறிவு வேண்டும்; நல்லவன் கெட்டவன் என்று பார்த்து நல்லவனுக்கு வோட்டு கொடுக்க வேண்டும். நல்லவன் பொதுவிடங்களில் தலைவனாய் வந்தால் நல்லது செய்வான்;

ஆசிரியை : ஆமாம் மருத்துவ ஐயா ! அந்த மாதிரி தான் நம்ம சில்லா போர்டிருக்கிறது. இதைப் பார்த்துத்தான் நமது தமிழ்ப்புலவர் .

இச்சை வார்த்தை பலபேசி
　　ஏந்தும் பொருளை மிகக்கொடுத்தே
பச்சை யாகப் பொய்யுரைத்துப்
　　பலபேர் வாக்கைப் பறித்தசிலர்
நச்சை வாயி லுடையதொரு
　　நல்ல பாம்பு நிகராகப்
பிச்சை யான பெருஞ்சபையில்
　　பிரசி டெண்டாய்ப் பிழைப்பாரே .

என்று பாட்டுப்பாடியுள்ளார் டாக்டர் ஐயா !

மருத்துவர் : பாட்டு மிகவும் அழகாயிருக்கிறது வாத்தியாரம்மா! நீங்கள் இதற்கொன்றும் அஞ்சவேண்டாம். மருந்து கொடுக்கிறேன் வீட்டிற்குப்போய் கட்டிக்கொள்ளுங்கள். நன்றாய்விடும், ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் உங்களுக்கத் சொல்லுகின்றேன். அதை மாத்திரம் நினைவாக வைத்துக் கொள்ளுங்கள்.

ஆசிரியை : என்ன சொல்றிங்க ?

மருத்துவர் : நம்முடைய திருவள்ளுவர் ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்று சொல்லியிருக்கின்றார். ஆகையால் அந்த அயோக்கியப் பிரசிடெண்டாலே உங்கள் வேலைக்கே இடையூறு ஏற்பட்டால் கூட உயிரினுஞ் சிறந்த ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதுமின்றி

பொதுவிடங்களில் உட்கார்ந்து கொண்டு பொதுமக்கள் நன்மையைக் கெடுக்கும் கோநாய்க் கூட்டங்களைக் கண்டால் சிறிதும் அஞ்சாமல் அவர்கள் அயோக்கியச் செயல்களைக் குறித்துப் பொதுமக்களிடத்தே பிரசாரம் செய்யுங்கள்; **நமக்கு இனி பொது மக்கள்தான் அரசர்.**

ஆசிரியை : செல்வி என்ற வாத்தியாரம்மாளைப் பிரசிடெண்டு வரச்சொன்னார், அந்தம்மாள் போகவில்லை. அதற்காக, அந்தம்மாளைப் பதினைந்து நாளைக்கு ஒரு ஊராய் மாற்றினார்கள். அந்தம்மாள் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு சிவபெருமானே என்று அலுப்பற்று உட்கார்ந்திருக் கின்றார்கள். நானும் அப்படித்தான் செய்ய வேண்டும். போய் வருகிறேன் டாக்டர் ஐயா!

(திரை)

உறுப்பு - 10

இடம் : சில்லா போர்டு அலுவலகம்

காலம் : முற்பகல் மணி 10 லிருந்து.

உரியவர் : போர்டு தொடக்கப்பள்ளி ஆசிரியர் வேல், கோபால், ஐயாசாமி, வந்த ஆசிரியர், தலைமை எழுத்தர், பிரசிடெண்டும்.

(இரண்டு ஆசிரியர் அலுவலகத்திற்குச் சற்று தூரத்தில் நின்று பேசிக் கொண்டுள்ளனர்.)

வேல் : நண்பர் கோபால்! ஏன் நமக்கெல்லாம் போர்டிலேயிருந்து மூன்று மாதமாகச் சம்பளம் வரவில்லை! என்ன காரணமாகயிருக்கும்?

கோபால் : எல்லாம் ஏமாற்றுகின்ற காரணந்தான் நண்பரே!

வேல் : ஐயோ! ஐயோ!! ஏமாற்றலா? முதல் வைத்துக் கொண்டா நாம் வாத்தியார் உத்தியோகம் செய்கின்றோம்? சம்பளம் வராமையினால் மூன்று மாதமாய்ப் படாதபாடல்லவா நாமெல்லாம் படுகின்றோம்; வீட்டிலிருக்கும் பொன்னு பொடியை விற்றல்லவா குடும்பம் நடக்கிறது; எங்கள் வீட்டில் அருமையாய் ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது; அதற்குப் பால் வாங்கிப் போடுதற்குக் கூடக் கையில் காசு கிடையாது. நான் குடியிருப்பது ஒரு ஓட்டைக் குடிசில்;

அதை மேயவும் முடியவில்லை. எங்கள் ஊரிலிருந்து இங்குவரக் கையிலொரு காசும் இல்லைக் கடன் கொடுப்பார் யாருமில்லை ; அதனால், என் நடைவண்டியைத்தான் கட்டிவிட்டேன்.

கோபால் : என்ன நண்பரே! நாம் வருந்தினால் நமது பிரசிடெண்டிற்கு ஆகவேண்டிய தென்ன? நம் பிரசிடெண்டு தம்முடைய மனைவிக்கு வயிரக்கல் இழைத்த நகையாக வாங்கிப் போட்டிருக்கிறார். அவர் வீட்டுக் குழந்தைகளெல்லாம் க்ளுகோஸ், ஆர்லிக்சு, ஓவல்டின் முதலான மேனாட்டு உணவுகளை விதம் விதமாய் உண்கின்றனர். அவர்கள் குடியிருப்பதற்கு அருமையான பங்களா கட்டப்பட்டுள்ளது. இரண்டு பிளஷர்கார் வாங்கப் பெற்றுள்ளன. நல்ல நல்ல நஞ்சை புஞ்சைகளெல்லாம் வாங்கப் பெறுகின்றன; இவ்வளவு வேலை செய்வதும் நமது போர்டு பணந்தான்; வாத்தியாரை வயிற்றிலடித்து, கண்டிராக்டில் கந்தலாட்டுச் செய்து, மக்கள் நன்மையில் மண்ணைப் போட்டுச் சம்பாதித்த பணந்தான்.

வேல் : ஏழைகளை நசுக்கிப் பிழிந்து, பணக்காரர்கள் மட்டும் வாழ்ந்தால், ஏன் நாட்டில் சோசலிசம் பரவாது?

கோபால் : சோசலிசம் பரவட்டும் அல்லது பரவாமல் போகட்டும் ; அது பொதுமக்ளுடைய விருப்பம் ; எனக்கென்னமோ சில நாளாக உபாத்தியாயர் தொழிலில் விருப்பம் குறைந்து வருகிறது; ஏன் என்றால்? ஒழுங்காய் நடக்கும் ஆசிரியரையும் ஒழுங்கீனமாய் நடக்கும் ஆசிரியரையும் மேலதிகாரியர் ஒன்றாகவே கருதுகின்றனர். ஞாயமான குறைகளை எடுத்துச் சொல்லி, அதைத் தீர்க்கும்படி விண்ணப்பித்துக் கொண்டாலும் அவர்கள் செவி சாய்ப்பதில்லை; ஒருமுறை மேலதிகாரி ஒருவரிடம் இன்றியமையாத விசயத்தைச் சொல்வதற்குப் போயிருந்தேன்; அவர் என்னைக் கண்டவுடன் **"எண்ணெயில் விழுந்த பணியாரம் மாதிரி"** துள்ளி விழுந்தார். நான் **"தீபாவளிக்கு வந்த கோழி மாதிரி"** விழித்து விட்டுச் சே! சே!! இனி இந்த உபாத்தியாயர் தொழிலை விட்டு விட்டு, வேறு ஏதாவதொரு தொழிலைப் பார்த்துக் கொள்ள வேண்டும்; இது கேவலமான தொழில் என்று முடிவு கட்டிக் கொண்டு வந்துவிட்டேன் நண்பரே!

வேல் : அது நல்ல முடிவுதான்; அதைப்பற்றி நமது தமிழ்ப் புலவரொருவர்,

அடகெடுவாய்! பலதொழிலும் இருக்க வொன்றும்
அதட்டமிலா உபாத்தியராய் அமர்ந்து விட்டோம்
திடமுளவா ணிகராகத் திகழ்ந்தோ மில்லை!
தில்லுமுல்லாற் கோடிபணம் தேடா நின்ற
கடனறியா வோல்சேலர் ஆனோ மில்லை!
கன்னியராய் இசைநடனம் கற்றோ மில்லை!
தடபுடலாம் எம்எல்ஏ ஆனோ மில்லே!
தக்கதொன்றும் அறியாமல் தவிக்கின் றோமே

என்று பாடியுள்ளார் நண்பரே!

ஐயாசாமி : (தூரத்திலிருந்து கோபால், வேல் இவர்களைப் பார்த்து) நண்பர்களே! என்ன வந்த காரியத்தை விட்டுவிட்டுப் பாட்டு பாடிக் கொண்டிருக்கிறீர்கள்? வாங்க! ஹெட் கிளார்க்கினிடம் போய் வருவோம்.

(எல்லோரும் அலுவலகம் போகின்றனர்)

கோபால் : (தலைமை எழுத்தரைப் பார்த்து) குட்மார்னிங் சார்!

தலைமை எழுத்தர்: (தலையை அசைத்துக் கொண்டு) வாங்க! வாங்க!!

கோபால் : நம் கனம் பிரசிடெண்ட் அவர்கள் நன்றாயிருக்கின்றார்களா? ஊரில் தானேயிருக்கின்றார்கள்?

தலைமை எழுத்தர்: பிரசிடெண்ட் அவர்கள் ஊரில் தானிருக்கிறார்கள் ; உங்களிடத்தில்

ஒரு விசயம் சொல்லுகின்றேன் ; அதாவது, முன்பிருந்த பிரசிடெண்டு போகிற போக்கில் போர்டு பணத்தையெல்லாம் வாரிச் செலவு செய்துவிட்டார். நம் பிரசிடெண்டவர்கள் சார்ஜ் எடுத்துக் கொள்ளும்பொழுது போர்டில் ஒரு பைசா கிடையாது. அதனாற்றான் உங்களுக்கெல்லாம் மூன்று மாதச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. பாவம் ஏழை உபாத்தியாயர்கள் வருந்துவார்களே யென்று நினைத்து, இன்று தான் ஒருவரிடம் கடன் வாங்கி ஒரு குறிப்பிட்ட தொகையை அனுப்பிவைத்தார்கள். ஆனால், அந்தத் தொகையால் உங்களுக்கெல்லாம் இரண்டு மாதச் சம்பளந்தான் கொடுக்கமுடியும். அக்கவுண்டும் முடியவேண்டியிருக்கிறது. என்ன செய்வதென்று எனக்கே புரியவில்லை! (கொஞ்சம் நினைத்துப்பார்த்து) மூன்று மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டதாக் கையெழுத்துச் செய்துவிடுங்கள்! இரண்டு மாதச் சம்பளம் கொடுக்கிறேன்! ஒரு மாதச் சம்பளத்தைப் பழைய பிரசிடெண்ட் கணக்கில் வைத்து விட வேண்டியதுதான்.

(இதைக் கேட்டதும் கோபால் பின்னுக்கு நழுவுகின்றார்; கிடைத்தது போதும் என்பவர் முன்னுக்கு வருகின்றனர்)

வேல் : கொடுப்பதைக் கொடுங்கள் சார்! எந்த இடத்தில் கையெழுத்துப் போட வேண்டும்?

(தலைமை எழுத்தர் கொடுத்த கடிதத்தில் வேலும் இன்னும் பலரும் கையெழுத்திட்டு இரண்டு மாதச் சம்பளத்தை வாங்கிச் செல்கின்றனர். ஆனால், விசயம் தெரிந்த கோபால் முதலியோர் சும்மா போய்விட்டனர். பின்னர் மகிழ்வுந்தில் தலைவர் அலுவலகம் வருகின்றார். தலைமை எழுத்தர் எதிர்கொண்டழைத்துச் செல்ல அவர் நாற்காலியில் எழுந்தருளுகின்றார்)

பிரசிடெண்டு : (தலைமை எழுத்தரைப் பார்த்து) என்னையா! நம்ம பிளான்படி சம்பளங் கொடுத்தாயிற்றா?

தலைமை எழுத்தர்: பலபேர் வாய் பேசாமல் இரண்டு மாதச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டனர்; சில கழுதைகள் ஒன்றுஞ் சொல்லாமல் சம்பளத்தை வாங்கிக் கொள்ளாமலேயே நழுவி விட்டன.

பிரசிடெண்டு : ஓகோ! அவ்வளவு திமிரா? அந்தக கழுதைகளில் பர்மனெண்ட் ஹேண்டையெல்லாம் மாசத்திற்கு மூன்று ஊராக மாற்றிப் போடு; ஆக்டிங் பேர்வழிகளையெல்லாம் டிஸ்மிஸ் செய்துவிடு.

தலைமை எழுத்தர்: அப்படியே செய்கிறேன்!

பிரசிடெண்டு : யாராவது புதிசா வேலைக்கு வந்தால் நூறு உரூபாய்க்குக் குறைந்து வாங்க

வேண்டாம். மாற்றுதலுக்கு ஐம்பதுக்குக் குறைந்து வாங்க வேண்டாம். தெற்கேயிருக்கும் வாத்தியாரை வடக்கே மாற்று வடக்கேயிருக்கும் வாத்தியாரை தெற்கே மாற்று ; கிழக்கேயிருக்கும் வாத்தியாரை மேற்கே மாற்று ; மேற்கேயிருக்கும் வாத்தியாரைக் கிழக்கே மாற்று; ஆம்படையானும் பெண்டாட்டியுமாக ஒரு ஊரிலிருந்தால் அவர்களைத் தனித்தனி வெகு தூரத்துக்கப்பால் மாற்றிப் போடு; நல்ல கேள்ஸ் டீச்சராகப் பார்த்து நம்மக்கிட்டே வந்துவிட்டுப் போறத்துக்குச் சௌகரியமாக நம்ம ஊருக்குச் சமீபத்தில் போட்டு வை ; நான் போய்வருகிறேன்.

(தலைவர் போகிறார் ; பின்னர் ஒரு ஆசிரியர் தலைமை எழுத்தாளரிடம் ஏதோ சொல்லிக் கொள்ள வருகிறார்)

வந்த ஆசிரியர் : வணக்கம் ஐயா!

தலைமை எழுத்தர்: (சினத்துடன்) என்னா வணக்கம்!

வந்த ஆசிரியர் : நான் இருக்கின்ற ஊர் எனக்குச் சௌகரியமில்லாமல் இருக்கின்றது. அதனால், தயவு செய்து என்னைத் திருக்கோவிலூர் பக்கத்திற்கு மாற்றினால் நல்லது ஐயா!

தலைமை எழுத்தர்: ஓய்! உனக்கு மண்டையிலே மூளை யிருக்கிறதா? உன் சௌகரியத்திற்கு உன்னைத் திருக்கோவிலூர் பக்கத்தில்

மாற்றினால் அங்கேயிருக்கிற கழுதைகளை எங்கே மாற்றுவது? எந்தக் கழுதைகளை எங்கே போட்டாலும் அந்தந்தக் கழுதைகளும் இப்படித்தான் வந்து தொந்தரவு கொடுக்கிறது! போய்யா போ! இங்கே நிற்காதே!

(ஆசிரியர் வருத்தத்துடன் செல்கிறார்).

(திரை)

உறுப்பு - 11

இடம் : தன்மை, முன்னிலை

காலம் : தன்மை முன்னிலையார் காலம்.

உரியவர் : தன்மையாரும் முன்னிலையாரும்.

தன்மையார் : வாரும் வாரும் முன்னிலையாரே! தக்க சமயத்தில் வந்து சேர்ந்தீர்.

முன்னிலையார் : என்ன செய்தி?

தன்மையார் : என்ன செய்தியா? சொல்லுகிறேன் கேளும் ; நம் நாடு அறியாமையிலும் ஏழ்மையிலும் மூழ்கிக் கிடக்கின்றது. இந்த இரண்டையும் போக்கக் கல்வியும், செல்வமும் விரைவில் வேண்டும். கல்வியைப் பரப்புவோன் ஆசிரியன் ; செல்வத்தை உண்டாக்குவோன் உழைப்பாளி ; இந்த உலகத்திற்கு ஆசிரியனும் உழைப்பாளியும் இரண்டு கண்கள். இவ்விருவர்களையும் உலகம் போற்ற வேண்டும். இவ்விருவரின் உழைப்பாற்றான் உலகம் உயர்ந்த நிலைக்கு வரும். ஆனால், ஆசிரியன் அவமதிக்கப் படுகின்றான் ; வறுமை நோய்க்கு இரையாக விடப்பட்டிருக்கின்றான் ; உழைப்பாளி உதாசீனம் செய்யப்படுகின்றான்; ஒருவேளைச் சோற்றுக்கும் வழியில்லாமல் திண்டாட்டத்தில் விடப்பட்டிருக்கின்றான். அதைப்

பற்றித்தான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன் முன்னிலையாரே!

முன்னிலையார் : அப்படியா? முதலில் உலகத்திற்குக் கண் போன்ற ஆசிரியர்களின் அவதியைக் கொஞ்சம் சொல்லுங்கள்.

தன்மையார் : இதோ பாருங்கள்! அவர்கள் அல்லலைச் சிறிது விரித்து தொடக்கப்பள்ளி என்னும் நாடகமாகவே எழுதியிருக்கின்றேன்.

(முன்னிலையார் நாடகத்தைப் படிக்கிறார்)

முன்னிலையார் : தன்மையாரே! நாடகத்தை நன்றாக எழுதியிருக்கிறீர்கள் ; தன்னலம் பிடித்து கையூட்டு வாங்கும் இரக்கமற்ற இழிந்த அதிகாரிகளால் ஆசிரியர் எவ்வளவு துன்பம் அடைகின்றன ரென்பது இந்நாடகத்தால் நன்கு விளங்குகின்றதே!

தன்மையார் : நாடகத்தால் விளங்குகிறது விளங்கட்டும் முன்னிலையாரே! கையூட்டு வாங்கும் தன்னலம் பிடித்த தீய அதிகாரிகளை என்ன செய்யலாம்.

முன்னிலையார் : ஏதுமற்ற கல்வித்துறையில் இருக்கிற அதிகாரிகள் என்ன கையூட்டு வாங்கிவிடப் போகிறார்? இன்னும் மற்ற அரசியல் துறையில் இருக்கும் அதிகாரிகளைப் பாருங்கள் தன்மையாரே நூற்றுக்கணக்காகவும்,

ஆயிரக்கணக்காகவும் ஏன்? இலட்சக் கணக்காகவுங் கூட கையூட்டு வாங்கும் அதிகாரியர் இருக்கிறார் அங்கே!

தன்மையார் : நான் அவர்கள் இவர்களென்றெல்லாம் பிரித்துப் பேசவில்லை ; பொதுமக்கள் நன்மைக்குப் பாடுபடுகின்ற அரசியலில் கையூட்டு வாங்கும் அதிகாரியர் இருப்பதே மிக மோசம் என்பதுதான் எனது கருத்து முன்னிலையாரே!

முன்னிலையார் : மோசமாகத்தானிருக்கிறது! உயிரையும், உடம்பையும் நாட்டிற்கே தத்தம் செய்து, இரவும் பகலும் அதன் விடுதலைக்கே உழைத்த காங்கிரசுக் கட்சி மேலதிகாரத்தை மேற்கொண்டிருந்தாலும்; இந்த இலஞ்சம் வாங்கும் அதிகாரியர் செய்யும் ஊழலால், அந்தக் கட்சிக்கும் கெட்ட பெயர்தானே ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் உரிமைப்போர் நிகழ்த்திய காலத்தில், ஆங்கிலேயரின் வாலைப் பிடித்துத் திரிந்த கயவரெல்லாம் ; இந்த கையூட்டு ஊழலை எடுத்துக் காட்டிப் பொது மக்களிடத்தில் விளம்பரம் செய்து காங்கிரசு மதிப்பைக் குறைக்கவல்லவா பார்க்கின்றனர்; இதில் நாமென்ன செய்வது?

தன்மையார் : நாமென்ன செய்வதா? என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்? நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுடைய

நாம் கையூட்டு வாங்கும் அதிகாரியரைச் சும்மா விடுவதா? கையூட்டு வாங்கும் அதிகாரியரைக் கண்டால் ஒழிந்து போ! ஒழிந்து போ!! வென்று காறிக்காறித் துப்பவேண்டாமா?

முன்னிலையார் : ஐயோ! ஐயோ!! துப்பினால் அவர்கள் நம்மைச் சும்மா விடுவார்களா?

தன்மையார் : என்ன செய்வார்கள்?

முன்னிலையார் : கண்ணையும் காதையும் வாங்கிவிட மாட்டார்களா?

தன்மையார் : ஓ! மிகவும் நன்று ; இவ்வளவு பேருங்கூடிக் கண்ணையும் காதையும் வாங்க வரும்பொழுது நல்ல கிராக்கியாக விற்றுவிடுவோமே!

முன்னிலையார் : கிராக்கியாவது! விற்கிறதாவது! கையூட்டு வாங்கும் அதிகாரி யரெல்லாம் தடியைத் தூக்கிக் கொண்டு சண்டைக்கு வந்துவிடமாட்டார்களா? நாம் என்ன செய்வது?

தன்மையார் : இதற்கெல்லாமா அஞ்சுவது? செய்வதைச் சொல்லுகிறேன் கேளும் முன்னிலையாரே! கையூட்டு வாங்காத மேன்மை தங்கிய அதிகாரியர் இருக்கின்றாரே அவர்களிடத்திலே போய், அவர்களை மும்முறை வலம் வந்து, காலில் விழுந்து வணங்கித் தன்னலங் கருதாத தகைமையாரே!

ஒழுக்கங் குன்றா உத்தமச் செல்வரே ஏழைகட்கிரங்கும் இரும்பெருந் தலைவரே! என்று பாடிப் பரவி, அவர் செருப்பில் ஒட்டியுள்ள ஒரு துகளை எடுத்து ஊதிவிட்டால், அத்துகள் அணுகுண்டைப் போலப் பாய்ந்து சென்று சண்டைக்கு வந்த கையூட்டும் வாங்கும் அதிகாரியரை யெல்லாம் அழித்து விடுமே!

முன்னிலையார் : நல்லாச் சொன்னிங்க தன்மையாரே! கையூட்டு வாங்காத அதிகாரியருடைய செருப்படியின் பொடியொன்றுக்கும் கையூட்டு வாங்குகிற அதிகாரியர் நிச்சயமாய் ஒவ்வமாட்டார். கையூட்டு வாங்கும் அதிகாரிகள் வீழ்க! வீழ்க!! வீழ்க!!! கையூட்டு வாங்காத அதிகாரியர் வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

(திரை)

(பின்குரல்)

வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்ப தில்.

(முற்றும்)

பின்னிணைப்பு – 1

அடிகளாசிரியரின் வாழ்வும் பணியும்

(அ.சிவபெருமான்)

தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாற்றின் வடக்குக் கரையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூராகும். இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்று கூறும். பொது மக்கள் கூகையூர் என்று கூறுவர்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து ஆற்றங்கரைப் புதருள்தங்கி, சிவயோகசமாதியை மேற்கொண்டிருந்தார். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவர்க்குப் பணிவிடை செய்தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும் மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி, வீரசைவ நெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்து, பக்குவற்கு உபதேசிக்கும் மாதவக் குருபரனாக மாலாங்கனை ஆக்கினார். அம்மாலாங்கனிலிருந்து அவன் பரம்பரை சித்தநாதேச்சுராதீனமாக ஆயிற்று. அப்பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப் பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி குங்கும அம்மாள் ஆவார். அவ்விருவரும் நன்கு படித்தவர்.

அவ்விருவர்க்கும் 10.5.1910 - இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூசம் நாளில் திரு. அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் இயற் பெயர் குருசாமி அய்யர் என்பதாகும். பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத் தலைவர் தவத்திரு. மறைமலையடிகளார் கருத்துப்படி திரு. அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

இளமைக் காலமும் கல்வியும்

இவர்க்கு ஏழாம்யாண்டில் தந்தையார் காலமாகி விட்டார். இவர் தாயார் குங்கும அம்மாள்தான் இவரைப் பேணிப்புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம்பலூருக்கும் அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவர் தாயார் பிறந்த ஊராகும் தாய்மாமன் இருவராவர். மூத்தவர் திரு. கு. சுப்பிரமணியதேவர் இளையவர் கு. சிவப்பிரகாச தேவர் ஆவார். இவ்விருவருக்கும் நன்கு தமிழ் பயின்றவர் மருத்துவக்கலை, சோதிடக் கலை ஆகியவற்றிலும் வல்லவர், அடிகளாசிரியர் இவர்கள் (தாய்மாமன்) வீட்டில் தங்கி, தமிழ்ப் பயிற்சியையும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த திரு.மருதநாடார் என்பவரிடம் சோதிடக் கலையைக் கற்றுக் கொண்டார். முசிறி அரசினர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராய் இருந்த உயர்திரு. வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையை முறைப்படி பாடங்கேட்டார். 1937 - இல் இவர் தனியாகப் பயின்று சென்னைப் பல்லைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப்புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம் கல்லூரியில் பணி

14.07.1938 - இல் மயிலம் திருமடத்தில் சீமத் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதல் பெற்றபின் 1.7.41 முதல் 30.11.41 வரை விரிவுரையாளராகவும் 11.2.42 முதல் 1.7.1950 வரை துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

கரந்தைத் தமிழ்க் கல்லூரிப் பணி

பின்னர் 3.7.1950 முதல் 3.7.1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி 4.4.70ல் ஓய்வு பெற்றார். ஓய்விற்குப் பின் சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரி ஒன்றில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

சென்னை / தஞ்சைப் பல்கலைக்கழகப் பணிகள்

சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆராய்ச்சியாளராக ஓராண்டு (1977) பணியாற்றினார்.

20-1-1982 ஆம் நாளிலிருந்து 1.10.-1985 ஆம் நாள்வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்பு நிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார். அதன்பின் மூப்பின் காரணமாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தாமே விலகிக் கொண்டார். தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர் தம் இல்லத்திலிருந்து அப்பணியை (தொல்காப்பிய ஆய்வுப் பணியை) நிறைவு செய்து வழங்கினார்.

குடும்பம்

**"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"**

என்று தமிழுக்காக வாழ்ந்து வரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், தாம் பிறந்த ஊரிலேயே, பிறந்த கூரை வீட்டிலேயே மண் தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நிலைப்படுத்துவார் போல் எளிய இயற்கை வாழ்வே வாழ்ந்து வருகிறார். தமிழ்ப் பணிக்காகவே தமது பொருளாதாரத்தைச் செலவிட்டு வேண்டுமென்றே எளிய இயற்கை வாழ்வைத் தேடிக் கொண்டவராவார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி சான்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனையமனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் உடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக கொண்டிருக்கின்றது. ஒரு நூறு (101) அகவை நிறைந்த முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று. தம் நூல்களை அச்சேறி உலாவர வேண்டுமென்ற எண்ணம் ஒன்றுடன் மட்டுமே இவர் இன்றும் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச்செய் யுமாறே

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது முதிர்ந்த வயதிலும் (101) தமிழ்ப்பணி செய்து வருகின்றார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை ஆற்றி வந்தார். அன்றியும் இடையறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இதுகாறும் இவர் உரை நூல்கள் படைப்பிலக்கிய நூல்கள் என்ற பல்வகையில் 64 நூல்களைப் படைத்துள்ளார்.

....

பின்னிணைப்பு – 2

தமிழறிஞர் அடிகளாசிரியர் அவர்களின் ஆக்கத்தில் உரையில் பதிப்பில்

வடிவங் கொண்டெழுந்த அருந்தமிழ் நூல்கள் அறுபத்து நான்கின் பட்டியல் (ஆண்டு நிரலாக 1936 - 2008)

வ. எண்.	நூற் பெயர்	ஆண்டு
1.	வீரசைவப் பிரமாணம் (உரைநடை-சுவடிப்பதிப்பு)	1936, 2008
2.	எங்களூர் (உரைநடை - ஆக்கம்)	1937, 2004
3.	சதமணி மாலை (செய்யுள் - மூலம்)	1938
4.	சிவப்பிரகாச விகாசம் (செய்யுள் - மூலம் - சுவடிப்பதிப்பு)	1939
5.	பிள்ளைப்பாட்டு (ஆக்கம் - செய்யுள்)	1945
6.	ஆறகலூர்க் காமநாதர்க் கோவை (செய்யுள் - மூலம் - ஓலைச்சுவடிப்பதிப்பு)	1947
7.	திருஅரசிலிக்காதை (ஆக்கம் - செய்யுள் - தலபுராணம்)	1948
8.	தொடக்கப்பள்ளி (ஆக்கம் - நாடகம்)	1949-2010
9.	திருவலஞ்சுழி தேவாரப் பாடல்கள் - உரை	1956
10.	மேன்மைப் பதிகம் (செய்யுள் - மூலம்-சுவடிப்பதிப்பு)	1957
11.	தமிழகக் கல்வெட்டுகள் (ஆராய்ச்சி உரை - மு. கோவிந்தராசனுடன் இணைந்து)	1957 - 58
12.	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாட்டும் சொற்பொருள் உரையும்	1958

வ. எண்.	நூற் பெயர்	ஆண்டு
13.	சதுர்லிங்க தசகோத்திர தசகம் (செய்யுள் - பதிப்பு)	1958
14.	குழந்தை இலக்கியம் (ஆக்கம் - செய்யுள்)	1964
15.	சான்றாண்மை (ஆக்கம் - செய்யுள்)	1964, 1975
16.	சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாட்டும் சொற்பொருள் உரையும்	1967
17.	அருணகிரி அந்தாதி (பொழிப்புரை - சரசுவதி மகால் வெளியீடு)	1967
18.	மருதூர் அந்தாதி-பழைய உரை (சரசுவதி மகால் வெளியீடு)	1968
19.	காலச் சக்கரம் (சோதிடம் - சுவடிப்பதிப்பு - சரசுவதி மகால் வெளியீடு)	1969, 1979
20.	தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை (பதிப்பு)	1969
21.	வராகர் ஓரா சாத்திரம் - பழைய உரையுடன் (சுவடிப்பதிப்பு - சோதிடம்)	1970, 1981, 1991
22.	சிவஞான தீபம் - உரை (சரசுவதி மகால் வெளியீடு)	1970
23.	வீரசைவ சிவபூசா விதி (உரைநடை - பதிப்பு)	1976, 1997, 2008
24.	சிவப்பிரகாச விகாசம் - மூலமும் உரையும் (சரசுவதி மகால் வெளியீடு)	1977
25.	ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக் கழகம் வெளியீடு)	1977
26.	தமிழிலக்கண, இலக்கியங்களில் சைவ சித்தாந்தம் (மதுராந்தகம் குருகுலம் வெளியீடு)	1978
27.	வடசென்னிமலை திருமுருகன் தோத்திரப்பாமாலை (ஆக்கம்)	1980, 2004
28.	அரசியல் இயக்கம் (ஆக்கம் - செய்யுள்)	1981

வ. எண்.	நூற் பெயர்	ஆண்டு
29.	திருவாசகம் கோயில் திருப்பதிகம் - சொற்பொருள் உரை	1981
30.	பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் - (ஆக்கம்) குழந்தை இலக்கியம் II.	1983
31.	அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் (ஆக்கம்)	1984
32.	உளத்தூய்மை (ஆக்கம் - செய்யுள்)	1984, 1994, 2004,2005, 2009
33.	விலையேற்றமும் வாழும் வழியும் (ஆக்கம்)	1984
34.	தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல் இளம்பூரணர் உரை (தமிழ்ப் பல்லைக்கழகப் பதிப்பு)	1985
35.	சிவபுராணச் சிற்றுரை - உரைநடை	1986, 1999, 2007
36.	தொல்காப்பியம் - சொல்லதிகாரம்- இளம்பூரணர் உரை (தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு)	1988
37.	தண்ணிழல் (செய்யுட் காப்பியம்)	1990-2009
38.	சதமணி மாலை மூலமும் உரையும்	1990
39.	சித்தாந்த சிகாமணியின் அங்கத் தலத் திரட்டு (கருத்துரை)	1992
40.	ஸ்ரீமத் சிவஞான பாலதேசிகர் திருப்பள்ளி எழுச்சி - உரை	1993
41.	மறவர் நத்தக் குன்றமரும் திருமுருகன் திருவடிப் பாமாலை (ஆக்கம் - செய்யுள்)	1993
42.	தொழிலியல் (ஆக்கம் - செய்யுள்)	1993, 2009
43.	மெய்ப் பொருட்காதை (ஆக்கம் - செய்யுள்)	1995
44.	தமிழ் மாண்பும் தமிழ்த்தொண்டும் (ஆக்கம் - செய்யுள்)	1996
45.	திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் பரிசு பெற்றது)	1998
46.	ஒன்பான் கோள் வணக்கப் பாடல்கள் (ஆக்கம் - செய்யுள்)	1999

வ. எண்.	நூற் பெயர்	ஆண்டு
47.	திருமூல ஔவையார் அருளிய நல்வழி - மூலமும் உரையும்	1999
48.	காயத்துள் நின்ற கடவுள் (ஆராய்ச்சி உரை)	1999
49.	குதம்பைச் சித்தர் பாடலும் உரையும்	1999
50.	திருவாசக அநுபூதி (ஆராய்ச்சி உரை)	2000
51.	கீதையின் அறிவுப் பொருள் (ஆராய்ச்சி உரை)	2000
52.	இட்டலிங்க அபிடேக மாலை என்னும் திருமுழுக்காட்டு மாலை மூலமும் உரையும்	2001
53.	திருமந்திர உணர்வு (ஆராய்ச்சி உரை)	2001
54.	சசிவன்ன போதம் மூலமும் உரையும்	2002
55.	திருமூலரின் முப்பது உபதேசம் (ஆராய்ச்சி உரை)	2002
56.	பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும்	2003
57.	சிறுவர் இலக்கியம் (குழந்தைப் பாடல்கள்)	2004
58.	திருமந்திரத்தில் எட்டாந்தந்திரம் - மூலமும் உரையும்	2005
59.	நல்லவை நாற்பது (குகையூர் தமிழ்ச்சங்க வெளியீடு)	2005
60.	திருநாளைப் போவார் திருக்காதை (ஆக்கம் - செய்யுள்)	2006
61.	பெருந்திரட்டு - உபதேசப்பணை	2006
62.	திரு.அடிகளாசிரியர் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள்	2007
63.	தொல்காப்பியம் - பொருளதிகாரம் - எட்டு இயல்கள் (செய்யுளியல் நீங்கலாக - தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு)	2008
64.	தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி	2008

பின்னிணைப்பு – 3
அடிகளாசிரியர் பெற்ற பாராட்டுகள்

1. 1967 - ஆம் ஆண்டு இராசபாளையம் மணிமேகலை மன்றத்தார் நிகழ்த்திய தொல்காப்பியம், இருசூத்திர விளக்கக் கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றுள்ளார்.
2. கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் மடாலயத்தைச் சேர்ந்த தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் இவரைப் பேரூர் ஆதீனப் புலவராக்கிச் செந்நாப்புலவர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளனர் (28.02.72)
3. விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி தமிழ்க்கவிஞர் மன்றத்தினர் இவருடைய தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பதிப்பினைப் பாராட்டி பொன்னாடைப் போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளனர்.
4. தஞ்சாவூர் கரந்தை மீனாட்சியம்மன் திருக்கோவிலில் முறையாகச் சைவ சித்தாந்த நூல்களைப் பாடம் சொன்னதால் அக்கோயில் சைவ பிரச்சார சபையினரால் பாராட்டப் பெற்றுள்ளார்.
5. தமிழ்மொழிக்கு எண்ணிறந்த சேவைகளைப் பல்லாண்டு காலம் சலியாது செய்து வருகின்றமையால் திருக்கோவிலூர்ப் பண்பாட்டுக் கழகம் 1992-ம் ஆண்டிற்குரிய கபிலர் விருதை இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது.
6. சென்னைக் கம்பன் கழகத்தினர் இவருடைய தமிழ்ப் பணியை பாராட்டிச் சான்றிதழும் பணமுடிப்பும் வழங்கினர் (07.08.1992)
7. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இவருடைய தொல்காப்பியப் பணியைப் பாராட்டி இவருக்குத் தொல்காப்பியச் செம்மல் என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. (04.0-6.1997)

8. கும்பகோணம் வீரசைவப் பெரியமடம் இவருக்கு வீரசைவக் காவலர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.
9. மயிலம் பொம்மபுர ஆதீனம் இவருக்குக் கற்பனைக் களஞ்சியநம்பி என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. (12.10.1998)
10. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இவரெழுதிய திருமூலரும் பேரூரையும் என்ற ஆய்வு நூலை 1998 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களுள் சிறந்த நூலாகக் கருதி முதல் பரிசாக உரூபாய் பத்தாயிரத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளது. (15.01.2000)
11. சென்னையைச் சேர்ந்த சேக்கிழார் ஆய்வு மையத்தினர் இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி சேக்கிழார் விருதையும் நினைவுப்பரிசாக ரூபாய் பத்தாயிரத்தையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். (27.07.2001)
12. தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் மேன்மை தங்கிய தமிழவேள் த.வே. உமாமகேசுவரன் பிள்ளைப் பெயரில் விருது வழங்கிச் சிறப்பித்தனர். (09.01.2002)
13. காஞ்சிபுரம் சீசங்கரமடம் இவருடைய சைவப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து இவருக்குப் பத்தாயிரம் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தது. (18.01.04)
14. தமிழ்ச் சுரங்கம் - சென்னை - தொல்காப்பியர் விருதும் பொற்கிழியும் வழங்கிச் சிறப்பித்தது. (29.10.2006)
15. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் - தமிழ்ப் பேரவைச் செம்மல் விருதும் பொற்கிழியும். (13.2.2009)
16. நடுவண் அரசு, செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் சார்பாக இந்தியக் குடியரசுத் தலைவரின் விருதாக "தொல்காப்பியர் விருதும்" உரூபாய் ஐந்து இலட்சம் பொற்கிழியும் (28-3-2010) வழங்கிச் சிறப்பித்துள்ளது.

தொடக்கப்பள்ளி

(கையூட்டு ஒழிப்பு நாடகம்)

கையூட்டு வாங்காத மேன்மை தங்கிய அதிகாரியர் இருக்கின்றாரே அவர்களிடத்திலே போய், அவர்களை மும்முறை வலம் வந்து, காலில் விழுந்து வணங்கித் தன்னலங் கருதாத தகைமையாரே! ஒழுக்கங்குன்றா உத்தமச் செல்வரே! ஏழைகட் கிரங்கும் இரும்பெருந்தலைவரே! என்று பாடிப் பரவி அவர் செருப்பில் ஒட்டியுள்ள ஒரு துகளை எடுத்து ஊதிவிட்டால், அத்துகள் அணுகுண்டைப் போலப் பாய்ந்து சென்று சண்டைக்கு வந்த கையூட்டு வாங்கும் அதிகாரியாரையெல்லாம் அழித்துவிடுமே.

(திரு. அடிகளாசிரியன்)